"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் : 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 | யாழ்ப்பாணம் 1962-ம் ஆ. ஆடிமீ 1-ம் உ ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | இதழ் 26

இலங்கையில் வெளிவரும்
ஒரேயொரு கத்தோலிக்க
தமிழ்வாரப் பத்திரிகை
சத்தியவேத
பாதுகாவலன்
இதனை ஆதரிப்பது
ஒரு கத்தோலிக்க தொண்டு
வருடசந்தா :
இலங்கை : ரூபா 6-00
வெளிநாடுகள் : ரூபா 6-50

# லத்தீன் அமெரிக்காவில் திருச்சபையின் தீவிர திருத்தொண்டு

## இல்லறத்தாருக்குச் சிறந்த பயிற்சி

லத்தீன் அமெரிக்காவுக்குச் சேர்ந்த பலதேசங்களிலிருந்து லண்டனுக்குஇவ்வாரங்கிடைத்த செய்தியிலே திருச்சபையாலும் தனிப்பட்ட கத்தோலிக்க மக்களாலும் அங்கு நிலைபெறும் சமூகப்பிரச்சினைகளைத் தீர்க்கச் சிறந்த தொண்டுகள் செய்யப்படுவதாக அறியக்கிடக்கிறது.


சில பிரதானதொண்டுகள் பின்வருவன :

1. மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த ஆறுதேசங்களிலும், 23-ம் அருளப்ப பாப்பரசர் வெளிப்படுத்திய "அன்னையும் ஆசிரியையும்" என்ற சுற்று நிருபத்திற்கேற்ப இல்லறத்தாருக்கு ஒரு விசேஷ பயிற்சி அண்மையில் நடைபெறவிருக்கிறது. இது கொஸ்ரறிக்கா, எல்சல்வதோர், குவாத்தெமல, கொண்டுறுஸ், நிக்கருக்குயா, பனமா என்றதேசங்களில் சிவிக்கும் 11,500,000 கத்தோலிக்கரின் வாழ்க்கையைப் பாதிக்கும் பற்பல உத்தியோகங்களிலிருப்போருக்கும், சர்வகலாசாலை மாணவருக்கும், முதலாளிகட்கும், தொழிற் தலைவர்களுக்கும் அளிக்கப்படும் இப்பயிற்சி சிறந்த தலைவர்களைப் பயிற்றுவதற்கேற்றதாயிருக்கும்.

2. புத்திசாதுரிய விமான ஏற்றுமதி.

லபாசியாவின் மலைப்பாகத்தின் தலைநகராகிய பொலிவியாவிலிருந்து 24தொன் நிறையுள்ள நிலத்தைப் பிளக்கும் ஓர் இயந்திரம் பகுதி பகுதியாகக் கழற்றப்பட்டு ஆறுமுறை விமானமூலமாக, அத்தேசத்தின் காடடர்ந்த வடகிழக்குப்பிரதேசத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மேரிநோல் பங்கின் கட்டளைக் குரவராகிய வண. யோண் டி யேத்றிக் குருப்பிரசாதியவர்களின் வேண்டுகோளின்படியே இது நடைபெற்றது. போலியாவுக்குச் சேர்ந்த மூன்று யந்திர நிபுணரும் இரண்டு வர்த்தக விமானச் சாரதிகளும், ஒருலங்காஸ்தர் விமான மூலம் இந்த இயந்திரத்தை பெனிநதியோரத்திலுள்ளறேயஸ் என்ற கிராமத்திற் கொண்டு சேர்த்தனர். காடடர்ந்த இவ்

(2-ம் பக்கம் பார்க்க)



மருதமடுத்திருப்பதி மகோற்சவதினத்தின்போது பங்குபெறும் பக்தர்குழாமின் ஒருபகுதி

# மருதமடுத் திருப்பதியில் ஆடி மகோற்சவம்

## ஆரணியத்தினூடே அருள்மாரிபொழியும் அன்னை மேரி

கானகத்தின் மத்தியிலே, கிருபாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் வானவர்க்கரசியாம் கன்னிமரித்தாய், இரக்கத்தின் ஊற்றாய், இளைப்பாற்றிநல்கும் குளிர்ப்பூங்காவாய், அண்டினோரை ஆதரிக்கும் அடைக்கலமாய், அல்லலுற்று அழுதுபுலம்பும் மக்களை அணைத்து ஆறுதல்வருவிக்கும் அன்னையாய் இலங்குகின்ருள். அவள் செங்கமலச் செஞ்சீரடிகளில், அங்கமெலாம் வாய்ாய் அழுது புகழ்பாடி அருள்தேடும் மக்கள்குழாம் பொங்கிப் பிரவகிக்கும் காட்சி என்றும் எங்குமே காணுத மாட்சியாகும்.

"நீர் விண்ணுலக ஏணியாய்ப் படைக்கப்பட்டிருக்கின்றீர். தெய்வீகமாட்சி இவ்வுலகுக்கு இறங்கவும் எங்கள்தாழ்ச்சி வானகம் வரை உயர்த்தப்படவும் நீர் ஏணியானீர். வானத்துக்கும் பூமிக்குமிடையே சமரசம் ஓங்கவும், கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே நட்பு நிலவச்செய்யவும், உமது திருமகனிடம் மன்னிப்புப்பெற்றுத் தந்தருளும்" என்று வேத நூல் வித்பன்னர்கள் புகழ்ந்து பாடும் தெய்வீக ஏணியாம் மரியன்னையின் வல்லமையை உணர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் சாதிமதபேதமின்றி மருதமடுத் திருப்பதியில் அவள் திருப்பாத மலரடியில் தெண்டனிட்டுத் திரும்புகின்றார்கள்.

எப்பொழுதும் துணைசெய்ய விரைந்துவரும் ஒருதாய் என்ற பெருநம்பிக்கையோடு ஈழத்தின் பலபாகங்களிலிருந்தும் காட்டாற்று வெள்ளம்போலப் பெருகும் சனவெள்ளத்தின், புகழ்ச் சங்கி

[5-ம் பக்கம் பார்க்க]

# பாண்டாவின் வாக்குறுதியும், எச்சரிக்கையும்

"குருமார் சுவிசேஷத்தொண்டுடன் நின்றுவிடுவார்களாகில் என்னையோ, என் கட்சியையோ பற்றி அவர்கள் அஞ்சவேண்டியதில்லை" என ஆபிரிக்க நியாசாலாந்திலுள்ள மலவை காங்கிரஸ் கட்சித்தலைவர் ஹேஸ்ரிங்ஸ் பாண்டா கூறினர். அரசியலில் தலையிடாமலிருக்கும்வரை அதிமேற்றிராணியார் தாம்விரும்பிய அளவு மிஷனரிக் குருமாரை அழைப்பிக்கலாம் எனவுங் கூறினர்.

தேவவாக்கியத்தைப் போதித்தும், எனது மக்களுக்குக் கல்விப் பயிற்சியளித்தும் சேவைபுரியும் குருமாரை நான் வரவேற்கிறேன். ஆனல், அவர்கள் அத்துடன் நின்றுவிடட்டும்.

எந்தநேரம் அவர்கள் அத்தொண்டைவிட்டு, தமது அரசியல் கொள்கைகளுக்காகவும், சமூகக் கொள்கைகளுக்காகவும் சமயத்தை உபயோகிப்பார்களோ அந்நேரம் நான் அவர்களை வெறுத்து நானும் என் கட்சியும் அவர்களை எதிர்ப்போம்.

சமயப்பற்று

நான் கடவுட்பற்றுள்ளவனகையால் சமயப்பற்றுள்ளவன். கடவுளிலே நம்பிக்கையின்றி நம் நாடு முன்னேற முடியாது. குருமார் தேசாபிமானங் கொண்டிருப்பது பிழையன்று. கடந்த யுத்தத்தில் சமயக்குரவர் பலர் சுதந்தரப்போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமது நாட்டிற்காகப் போராடியதற்காக அவர்கள் நரகத்துக்குப் போவார்கள் என எவருங் கூறியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது ஆபிரிக்கயாத்திரை-3

# கிறிஸ்தவ ஒற்றுமையின் சாத்தியக்கூறுகள்

— வண. பிரான்சிஸ் ரிப்பேஅடிகளார்

ஒரு கத்தோலிக்கர் வேறுமதங்களின் வழியே இறைவனை வழிபடுவதற்கு ஒருபோதும் இணங்கமாட்டார். கிறிஸ்துவை வழிபடும் புரொட்டஸ்தாந்துகளின் அல்லது வேறெந்த மதத்தினரின் ஆராதனைமுறைகளைக் கத்தோலிக்கர் விரும்புவதில்லை என அந்த ஆங்கிலேயர் மேலும் குறிப்பிட்டார். அங்கிளிக்கன் சபையைச்சேர்ந்த அந்த மனிதர் எம்திருமறைபற்றிக் கொண்டிருந்த கொள்கைகளையிட்டு நான் ஆச்சரியமடைந்தேன்.

இப்போதெல்லாம் பலமதத்தவரும் ஒன்ருகக்கூடி வழிபடுவதுபற்றிப் பேசிக்கொள்கிருர்கள். இவ்விதபேச்சுகள் அவர்கள் தங்கள் மதத்தில் ஆழமான விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லையென்பதைக் காட்டுகிறதல்லவா என யான் குறிப்பிட்டேன். உண்மைதான் என ஒப்புக்கொண்டார் அந்த ஆங்கிலேயர். இத்தருணத்தில், ஆங்கில திருச்சபையின் விசுவாச சத்தியங்கள் எவை என்ருெரு நூல் எழுந்தது. சுற்றிப் பார்த்தேன். அமெரிக்கமாதொருத்தியே இக்நூலையெழுப்பியவள். தொடர்ந்து கூறினுள்: திவ்விய பூசை, பாப்பு கிறிஸ்துவின் பிரதிநிதியாக விளங்குதல், பாப்புவின் வழுவாவரம், மரியாயின் மாசில்லாத உற்பவம், மரியாயின் ஆரோபணம் என்ற கத்தோலிக்கரின் விசுவாச சத்தியங்களில் ஆங்கில திருச்சபையின் மதபோதகர்கள் நம்பிக்கைவைப்பதில்லை. இச்சத்தியங்களை அவர்கள் பலமாக எதிர்க்கின்ருர்கள். இந்த எதிர்ப்புகளையெல்லாம் தகுந்தமுறையில் முறியடித்து எவ்விதம் கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல் இயலுமென்பதுதான் புரியாத புதிராயிருக்கின்றது என அடித்துப் பேசினுள்.

நல்லது நீங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என ஆங்கிலேயர் வினவினுர். யான் யூதமதத்தவள் என இளநகையுடன் பதிலளித்தாள் அமெரிக்க நங்கை. இந்த ருசிகரமான விவாதத்தில் இப்போது ஓய்வுபெறும் ஆசிரியரும் கலந்துகொண்டார். வில்லியம் பூத் என்பவர் இரட்சணிய சேனையை ஸ்தாபித்தார். இது நம்காலத்தில் நடந்தொன்று. இதுபோலவே பல நூற்ருண்டுகட்கு முன்னர் கிறிஸ்து சிறந்த நிர்வாகத்துடன் இயங்கும் ஒரு சபையை ஸ்தாபித்தார். கிறிஸ்து கடவுளென்பதை நான் நம்புகிறேன். தமது திருச்சபை ஒன்ருக இயங்க வேண்டுமென அவர் விரும்பினுர். அதற்காகப் பிரார்த்தித்தார். அதன் ஐக்கியம் குலைக்கப்படுவதைக் கிறிஸ்து நிச்சயமாக விரும்பவே மாட்டார். ஆயின், கிறிஸ்துவை வழிபடுபவர்களே தமக்குள் ஒன்றுக்கொன்று முரணுன கொள்கைகளால் தம்முள் மோதிக் கொள்கின்றனர் என்ருர் ஓய்வுபெற்ற ஆசிரியர்.

இன்று நடந்த சல்லாபத்தின் பயனுகக் கிறிஸ்தவ ஒற்றுமை என்பது பலனளிக்காத ஒரு கருமம் என்றல்லவா தீர்மானிக்கப்படுகிறது. இதைப்பற்றிச் சுவாமியார் கருதுவதென்ன? என என்னிடம் ஒருவர் வினவினுர்.

விசுவாசத்துடன் செபித்தல், ஆழமாகக் கிறிஸ்தவ சத்தியங்களைக் கற்றல், தர்க்கரீதியை விடுத்து நல்லமுடிவு காணும் நோக்கத்துடன் கலந்துரையாடல் என்பன கிறிஸ்தவ ஒற்றுமைக்கு வழிகாட்டும். கிறிஸ்துவின் கொள்கை இதுவென ஆராய்ந்தறிதல் இவற்றுள் முக்கியமானது. வேதாகமங்களை நன்குகற்றல் கிறிஸ்து எவ்வித திருச்சபையை நிறுவினுரென்பதை அறிய உதவும். திருச்சபையின் ஆரம்ப வரலாறுகளைப் பொறுமையுடன் ஆராய்தல் வேண்டும். பிழையான கொள்கைகளை உருவாக்கும் ஒரு சபையைக் கிறிஸ்து ஸ்தாபித்திருக்கவே மாட்டார் என்பதை நாம் மனதிற்கொள்ளுதல் அவசியம்எனப் பதிலளித்தேன்.

எனது பதிலைக்கேட்டவுடன் அங்கிருந்த ஒருவர், கத்தோலிக்க திருச்சபை மற்றைய மதங்களுடன் பல சந்தர்ப்பங்களில் ஒத்தியங்க மறுப்பதன் காரணத்தை இப்போதுதான் முதல் தடவையாக அறிந்துகொள்வதாகக் குறிப்பிட்டார். இச்சல்லாபம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் ருசியான தேநீர்ப்பானம் பரிமாறப்பட்டது.

நண்பகலும் அண்மியது. இதுவரை எமது நாவாய் 24 மணித்தியாலங்களில் 408 மைல்களைக்கடந்துள்ளதாக ஒலிபெருக்கி தெரிவித்தது. பிஸ்கே குடாவின் பக்கமாகக் கடல் 3 மைல் ஆழமாகவிருந்தது. ஜிபிரோல்ரர் துறைமுகம் எமக்கு முன்பாக 729 மைல் தொலையில் உள்ளது. இன்று மாலை 9-15 மணிக்கு எங்கள் நாவாய் இத்துறையைவிட்டு நீங்குமென்பதாக அறிவிக்கப்பட்டது.

மாலைநேரம் மனோகரமாகக் காட்சியளித்தது. நீச்சல் தடாகத்தில் நல்ல கூட்டம் காணப்பட்டது. நியூசிலாந்துப்பிரதமர் ரூசியாப்பிரதமர் குருஷேவைச் சந்தித்துவிட்டுத் திரும்பியதாக வானொலிச்செய்திகள் கூறின. குருஷேவ் பூரண அணு ஆயுதத்தடை விதிப்பை வரவேற்கின்ருரென நியூசிலாந்துப்பிரதமர் தெரிவித்திருந்தார். ஆயின், அணுஆயுதங்களைப் பூரணமாக அழித்துவிடினும் சோவியத் ரூசியாவே உலகில் மிகப்பெரிய வல்லரசாக விளங்கும். ஏனெனில், இவ்வாயுதங்களிலும் பெரியதோர் ஆயுதம் அதனிடம் உண்டு. அதுதான் பொதுவுடைமை என்னும் பயங்கர ஆயுதம். இவ்வாயுதத்தின்கீழ் திட்டமிட்டுச் செயலாற்றப் பயிற்றப்பட்ட தலைவர்கள் பலர் தற்போது உலகின் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளனர்.

(வளரும்)

## உயிர்த்தாசன்குளம் மாதர் கிராம முன்னேற்றச்சங்கம் திறப்புவிழா

மேற்படிச் சங்கத்திறப்புவிழா 18-6-62 மாலை 3-30மணிக்கு அதிவிமரிசையாக நடந்தேறியது. அன்று பல பிரமுகர்களுள், சமுகம் கொடுத்திருந்தனர். மன்னுர்மாவட்ட அரசாங்க அதிபரால் சங்கவிரிவுரை கூறப்பட்டது. முருங்கன் வண. தேவராஜா சுவாமியாரால் கட்டிடம் ஆசீர்வதிக்கப்பட்டு அழகான சொற்பொழிவாற்றப்பட்டது. சங்கக்காரியதரிசியால்வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. தனுதிகாரியால் வரவுசெலவுக்கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பறப்பாங்கண்டல் கிராமமுன்னேற்றச்சங்கக் காரியதரிசியால் ஒன்றுபட்டுவாழ வேண்டுமென்ற கருத்தமைந்த உரையாற்றப்பட்டது. உயிர்த்தாசன்குளம் பாடசாலைத் தலைமைஆசிரியரால் கிராமஒற்றுமை பற்றிச் சொற்பொழிவாற்றப்பட்டது.

பின் பாடசாலைச் சிறுர்களின் பாடல்களும், ஆடல்களும், [illegible] களும் இடம்பெற்றன. [illegible] குளம் என்னும் கிராமப்பெயர் இன்று தொடக்கம் உயிர்த்தாசன் குளம்என பாவனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றகாரியதரிசியின் பிரேரணையைச் சபைஏகமனதாய் [illegible]. [illegible] காரியதரிசியின் நன்றியுரையுடனும், மங்களகீதத்துடனும் விழா நிறைவெய்தியது.

# லத்தீன் அமெரிக்காவில்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடத்தில் மேரிநோல் சபைக்குரவர் அங்குள்ள றப்பர்த்தொழிலாளரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக 300 பிறேசில் விதைகளை உதவி, ஒரு கூட்டுறவு கிருஷிகத்திட்டத்தை அமுல்செய்கின்ருர். "பச்சை நகரம்" என்றழைக்கப்படுகிற 15 சதுரமைல் விஸ்திரணமான பிளாங்கா பிளோர் என்ற கிராமம் நெருங்கிய காட்டின் மத்தியில் காணப்படுகிறது. அரசாங்கத்தின் வேண்டுகோளின்படியே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நிலத்தைப்பிளக்கும் இயந்திர மூலம் பெனி என்ற காட்டில் ஒரு சிறந்த நிரந்தரமான ஊரை ஸ்தாபிக்க வண. டியேறிக் சுவாமியார் எதிர்பார்க்கின்ருர். பிளாங்கா பிளோர் என்ற இடத்தில் ஒரு விமானநிலையத்தை ஏற்படுத்தி, அங்கிருந்து பெரியவிமானங்கள் மூலம் பிறேசில் விதைகளைத் துரிதமாக ஏற்றுமதி செய்ய எண்ணுகிருர். இப்போது ஏற்படும் ஏற்றுமதிச்செலவின் அரைவாசிச்செலவில், இது நடைபெற முடியும் என்று நம்புகிருர்.

3. ஐக்கிய அமெரிக்காவில் லூயிஸ் நீலச்சிலுவைத் திட்டத் தலைவராயிருந்து பாப்பரசரின் சேவைக்காக, பொலிவியாவிலுள்ள கொச்சபம்பா என்ற இடத்துக்கு வந்துசேர்ந்த பிரான் கிளாக் என்னும் பெரியார், இங்கு உயர்ந்த வட்டிக்குப் பெரிய செல்வர்இடம் கடன்எடுத்துக் கஷ்டத்துடன் தொழில்ஆற்றும் "அமையா இந்தியர்" எனப்படும் கிராமவாசிகள் இலேசானமுறைகளில் கடன்வாங்கித் தம்தொழிலை நடத்தக்கூடிய சங்கங்களை நிறுவுவதில் மிகவும் ஊக்கமாக உழைத்து வருகிருர். கிளாக் கணக்குப்பகுதியில் ஒரு எம். ஏ. உயர்ந்த பட்டதாரி. கொச்சபம்பலாவுக்கு வருமுன் மெச்சிக்கோவிலும், பெறுவிலும், மேரிநோல் குரவரான வண. தானியேல் மக்கிளேவனிடம் இப்பகுதிமக்களின் கலாசாரம், பாஷை முதலியவற்றை நான்கு மாதங்களாகப் பயின்றவர். பொலிவியாவிலுள்ள கடன் வழங்கும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒன்று இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

4. சிலியிலுள்ள இருநூறு சர்வகலாசாலை மாணவர்களும், உயர்தரப் பாடசாலை மாணவர்களும் தங்களுடைய கோடைகால விடுமுறைகாலத்தைத் தென்பகுதியிலுள்ள ஏழைக்கமக்காரரினதும் தொழிலாளரினதும் நன்மைக்காக ஐக்கியசங்கங்கள் நிறுவுவதிலும் செலவுசெய்யத் திட்டமிட்டிருக்கின்றனர்.

இவ்வியக்கம் கத்தோலிக்க சர்வகலாசாலைச் சங்கங்களால் அநுமதிக்கப்பட்டிருக்கிறது. வைத்திய வசதிகளைத் தங்களுடன் கொண்டுசென்று இத்தேசத்தவரின் களியாட்டுகளில் புத்துயிர் புகுத்த எண்ணுகின்றனர்.

5. றியோடி ஜனேறியோவில் கனடாவைச்சேர்ந்த 25 குருமார், சந்நியாசிகள், இல்லறத்தார் பிறேசிலிலுள்ள ஏழைகள்மத்தியில் தொண்டுசெய்ய ஆயத்தப்படுகின்றனர்.

6. இத்தாலிய கத்தோலிக்கச் சங்கங்களால் புரட்டாதி மாசத்தில் ரோமைநகரில் நடைபெறவிருக்கும் அகிலமக்களின் கிராமீய வாழ்க்கை மகாநாட்டின் பயனுகவும் லத்தீன் அமெரிக்கா பல நன்மைகளை அடையும். ஐக்கிய அமெரிக்க தேசிய கத்தோலிக்க கிராம வாழ்க்கை சமாசத்தின் தலைவரான மகாவண. விகுட்டி ஆண்டகை இதில் ஒரு பொறுப்பாளியாயிருப்பர்.

அகில உலக உணவு கிருஷிக சங்கத்தில் பங்குபற்றிய கிராம வாழ்க்கை நிபுணர் "அன்னையும் ஆசிரியையும்" என்ற சுற்றுநிருபத்திற்கேற்ப இச்சேவையின் பல்வேறு அம்சங்களை நிறுவுவர்.

## தாண்டவன்வெளி

### முதல் வருடக் கொண்டாட்ட ஆரம்பம்

மட்டக்களப்பு—ஊறணி இருதயபுரத்தில் யேசுவின் திருஇருதயத் தேவாலயம்ஒன்று அமைக்கப்பட்டதைக் "காவலன்" வாசகருக்குச் சிலமாதங்களுக்குமுன் அறியத்தந்தோம். இத்தேவாலயத்தின் முதல்வருடக் கொண்டாட்டத்தை ஆடிமாதம் 1-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவதாகத் தாண்டவன் வெளிப்பங்குக் கிறிஸ்தவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

இக்கொண்டாட்டத்திற்கு ஆரம்பமாகக் கடந்த 17-6-62 ஞாயிறுமாலை 6மணிக்கு ஏராளமான யேசுவின் திருஇருதயபக்தர்கள் கூடியிருக்கப் பங்குக்குரு வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்களால் இத்தேவாலயத்தில் யேசுவின் திருஇருதயத்தின் கொடி, கொடிக்கம்பத்தில் மணியோசை, வெடியோசை, கரவோசையுடன் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து தினமும் மாலை 6-30 மணிக்குச் செபமாலை, பிரார்த்தனை, பிரசங்கம், திவ்விய நற்கருணை ஆசீர்வாதம், யேசுவின் திருஇருதயப்பக்தர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. திருநாளுக்கு முந்திய ஆனிமாதம் 30-ந் திகதி மாலை 7 மணிக்கு மகத்தான ஆடம்பர மாலையாராதனை இருக்கும். திருநாளன்று காலை 5-30 மணிக்கு 1-ம் பூசை கட்டளைக்குரவராலும், காலை 7-30 மணிக்கு மகா வந். இக்னேசஷ் கிளென்னி மேற்றிராணி ஆண்டவர் அவர்களாலும் சொல்லப்படும். மேற்றிராணி ஆண்டவர் அவர்களின் பூசையில் இப்பகுதிச்சிறுவர் சிறுமியருக்கு முதற் சற்பிரசாதமும் கொடுக்கப்படும். அன்று மாலை இப்பங்கில் உள்ள உறுதிப்பூசுதல் பெருத அனைவருக்கும் உறுதிப்பூசுதல் ஆண்டவர் அவர்களால் கொடுக்கப்பட்டு, திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் அருளப்படும். இம்முதல் வருடக் கொண்டாட்டம் பக்தியாயும், சிறப்பாயும் முடிவுபெற அனைவரும் மன்ருடும்படி வேண்டுகின்ருேம்.

ரோசாப்பூவானது தனது நிறத்தையும் வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக் கொள்ளுகின்றது. மனிதனுே இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## முதல்நன்மையும் உறுதிப்பூசுதலும்

திவ்வியநற்கருணைத் திருநாளாகிய சென்ற21-ந்திகதி வியாழக்கிழமை காலை நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் ஆசனக்கோவிலுக் கெழுந்தருளி நிறைவேற்றிய திவ்விய பூசையின் போது பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த 257பிள்ளைகளுக்கு முதன் நன்மையும், பூசைமுடிவிலே சுமார் 250பிள்ளைகளுக்கும், பிறருக்கும் உறுதிப்பூசுதலும் அருளலாயினர். அத்தருணம் அவர்களின் பெற்றாரும், சுற்றத்தவரும், அன்பர்களும், ஆசிரியர், ஆசிரியைகளும் பெருந்திரளாகச் சமூகமளித்துப்பயபக்தியாகத் திருவழிபாடுகளில் கலந்துகொண்டார்கள்.

## திவ்விய சற்பிரசாதத் திருநாள்

நம்முடையஆசனக்கோவிலிலே சென்ற24-ந்திகதிஞாயிற்றுக்கிழமை திவ்வியசற்பிரசாதத் திருநாள் வழமைபோலப் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 6-25 மணிக்கு வண. ஜே. பி. இம்மனுவேல் செல்வராஜாசுவாமியவர்கள் திருநாள் பாடற்பூசை நிறைவேற்றினர். சாயந்தரம் நடந்தேறிய திருமணித்தியால ஆராதனையின்பின் சற்பிரசாதநாதர் அலங்கரிக்கப்பெற்றுத் தேசோமயமாக விளங்கிய நகர்வீதிகளினூடாகப் பக்தர்குழாங்களின் செபவோசைகள், திவ்வியசங்கீதவோசைகள் மத்தியில் திருப்பவனியாக எழுந்தருளினர். நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் குருமார்புடைசூழச் சற்பிரசாத கதிர்ப் பாத்திரத்தை ஏந்திச்சென்றார். சந்தியோகுமையோர் ஆலயமுன்றிலிலும், சம்பத்திரிசியார்கல்லூரிப் பெரியவாயில் முன்பாகவும் அமைக்கப்பட்டிருந்த அழகியபலிபீடங்களிலே திவ்விய சற்பிரசாதம் எழுந்தேற்றஞ்செய்து ஆசீர்வாதம் அளிக்கப்பெற்றதும் திருநாள் நிறைவாயிற்று.

## புதியதமிழ் நீதியரசர்

அசைஸ்கமிஷனர் திரு. பி. ஸ்ரீகந்தராஜா அவர்களும், நீதிஅமைச்சின் நிரந்தரகாரியதரிசியான திரு. ஜி. பி. ஏ. சில்வா அவர்களும் புதியநீதியரசர்களாக நியமனஞ்செய்யப் பெற்றுள்ளனர். திரு. ஸ்ரீகந்தஇராஜா அவர்கள் 1932-ம்ஆண்டு ஓர்நியாயவாதியானார். பின்னர் 1939-ம்ஆண்டு நீதிப்பரிபாலன சேவையில்சேர்ந்து இலங்கையின் பல்வேறிடங்களிலும் மஜிஸ்றேற்றாகவும், மாவட்டநீதிபதியாகவும் கடமைபார்த்துவந்து சென்றவருடம் கார்த்திகைமாதம் அசைஸ்கமிஷனராக நியமனஞ்செய்யப் பெற்றிருந்தார். சென்றவெள்ளிக்கிழமை இவர் விசுவாசப்பிரமாணம் செய்துகொள்ளலாயினர்.

## கிறிஸ்ரியன் பிறதர்மாரின் அதிசிரேஷ்டர்

கிறிஸ்ரியன் பிறதர்மாரென அறியப்படுகின்ற கிறிஸ்தவகலாசாலைகளின் பிறதர்மாரினது அதிசிரேஷ்டரான சங். நிசெற் யோசெவ்பிறதர் அவர்கள் கீழ்த்தேசங்களிலே தமதுசுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு நிகழும்ஆடிமாதம் 10-ந்திகதியன்று முதன்முறையாக இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். இலங்கையிலே இவர் தமதுசபையைச் சேர்ந்த பிறதர்மார்களையும், அவர்களின் பழையமாணவர்களையும், அபிமானிகளையும் சந்திக்கவிருக்கின்றார். கொழும்பிலே கிறிஸ்ரியன் பிறதர்மாரால் நடத்தப்பட்டுவரும் சென்பெனடிற்கல்லூரி மைதானத்திலே பழையமாணவர்கள்சார்பாக இவருக்கு ஒரு மகத்தானவரவேற்பு நடத்துவதற்கான ஆயத்தம நடைபெறுகின்றது.

## ஆஸ்பத்திரித் தாதிகளான சங். கன்னியாஸ்திரிமார்

இலங்கையின் பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் தாதிகளாயிருந்து நோயாளரைப் பராமரித்து, மகத்தான தியாகசேவைகளை ஆற்றிவந்து, சாதிசமயபேதமின்றியே அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றுவந்த சங். கன்னியாஸ்திரிமார் 1964-ம் ஆண்டு பங்குனிமாதம் 15-ந் திகதியோடு ஆஸ்பத்திரிகளினின்றும் முற்றாக விலகிவிட வேண்டுமென்று சுகாதாரசேவைகளின் தலைவர் கொழும்பு அதிமேற்றிராணியாருக்குத் தெரிவித்திருக்கிறார். இவர்கள் படிப்படியாக அந்தந்த ஆஸ்பத்திரிகளை விட்டு விலகுவதற்கான ஆண்டு, மாதம், திகதிகள் வருமாறு:

நாவலப்பிட்டி மாவட்ட ஆஸ்பத்திரியிலிருந்து திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரிமார் 1963 ஆனிமாதம் 1-ந் திகதியன்று.

ருமகத்திலுள்ள மார்புநோய் ஆஸ்பத்திரியிலிருந்து நன்னம்பிக்கைமாதா சபைக் கன்னியாஸ்திரிமார் 1963 ஆனி 1-ந் திகதியன்று.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலிருந்தும், யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியிலிருந்தும் திருச்சிலுவைச்சபைக் கன்னியாஸ்திரிமார் 1963 ஐப்பசி 1-ந் திகதியன்று

வெலிசறையிலுள்ள மார்புநோய் ஆஸ்பத்திரியிலிருந்து தேவபராமரிக்கையின் சபைக் கன்னியாஸ்திரிமார் 1963 ஐப்பசி 1-ந் திகதியன்று.

மன்னார், முல்லைத்தீவு, ஹெந்தலை எனுமிடங்களிலுள்ள தொழுநோய் ஆஸ்பத்திரிகளிலிருந்து மரியாயின் பிரான்சீஸ்கன்சபைக் கன்னியாஸ்திரிமார் 1964 தை 1-ந். திகதியன்று.

கொழும்புப் பெரியஆஸ்பத்திரியிலிருந்து மரியாயின் பிரான்சீஸ்கன் சபைக் கன்னியாஸ்திரிமார் 1964 பங்குனி 15-ந் திகதியன்று.

இலங்கையரான கன்னியாஸ்திரிமாரும் அவ்வாறே விலகவேண்டியவர்கள்.

## ஆனையிறவு நன்னீர்ஏரி

ஆனையிறவுப் பாலத்திற்குக் கிழக்கேயுள்ள நீர்ப்பரப்பில்விழும் இரணைமடு நீர் இதுகாலவரை ஆனையிறவுப் பாலத்தின்கீழாக வழிந்துசென்று கடல்நீருடன்கலந்து வீணாகிக்கொண்டுவந்தது. ஆனால், ஆனையிறவுப் பாலத்தின்மூலம் இருநிலப்பரப்புகளையும் பிரித்துக் கொண்டிருந்தஇடைவெளி நிரந்தரமாக நிரப்பி இணைக்கப்பட்டுள்ளதால் இதற்குக்கிழக்கேயுள்ள நீர்ப்பாகம் நன்னீர்ஏரியாக மாறிவருகின்றது. இந்தஇடைவெளியை நிரப்புவதால் காலகதியில் கிழக்கேயுள்ள நீர்ப்பாகத்தை நன்னீர்ஏரியாக்கி யாழ்ப்பாணக் குடாநாட்டை வளப்படுத்திவிடலாமென்று முதலில்யோசனை வெளியிட்டு முயற்சியெடுக்கத் தொடங்கியவர் உதவிநீர்ப்பாசன தலைவரான திரு. எஸ். ஆறுமுகம்அவர்களே. ஆனையிறவிலுள்ளபாலம் விரைவிலே அகற்றப்பட்டதும் இருநீர்ப்பரப்புகளும் ஒரு குறுகியபாதைமூலம் நிலத்தினால் பிரிக்கப்படும். கிழக்கே நன்னீர்ஏரி உருவானதும் அந்தநீரை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் செலுத்தக் கால்வாய்கள்வெட்டுவதே அடுத்ததிட்டமாகும்.

* * *

● சர்வதேச இராணுவவீரர்களின் ஐந்தாவதுதிருயாத்திரை இருவாரங்களின்முன் லூர்துதிருப்பதிக்கு நடைபெறலாயிற்று. இதிலே உலகின் 20 நாடுகளைச்சேர்ந்த சுமார் 45,000வீரர்கள் கலந்துகொண்டார்கள். நோர்வேயின் இராணுவத்திலுள்ள எட்டுக்கத்தோலிக்கரில் [illegible] இதில் சேர்ந்துகொண்டனர்.

# உருளும் உலகில்

### ● பிலிப்பைன்

குடும்பசெபமாலை இயக்கத்தாபகரான பெயிற்றன்சுவாமியார் அண்மையில் பிலிப்பைன்தேசத்தில் தமதுசெபமாலை இயக்க சமாகமமொன்றை நடாத்திய போது அதற்குச் சமூகமளித்தோரின் தொகை 20இலட்சமெனப் பொலிசார் மதிப்பிட்டிருக்கின்றனர்.

### ● சிட்னி

கத்தோலிக்க பிரசுரங்கள் சம்பந்தமாக அவுஸ்திரேலியாவிலுள்ள கத்தோலிக்கர்களின் அபிப்பிராயங்களை அறிவதற்காகச் சென் வின்சென்ற் டிபோல் சபையாரின் அங்கத்தவர்கள் புள்ளிவிபரக் கணக்கொன்றைத் தயாரித்துவருகின்றனர்.

### ● டபிளின்

சீனக்கருதினலான வந்தனைக்குரிய தோமஸ் டியன் ஆண்டகை அண்மையில் தமது டபிளின்விஜயத்தின்போது சீனப் பொதுவுடைமைவாதிகள் மரியாயின் சைனியத்தையே தங்கள் மிகப் பெரிய எதிரியாக மதிக்கிறார்களெனக் குறிப்பிட்டுள்ளார்.

### ● மெக்சிக்கோ

பொதுவுடைமைத் தத்துவங்களைத் தழுவியதான ஒருநூல் பாடப்புத்தகமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை ஆட்சேபிக்குமுகமாக அண்மையில் மெக்சிக்கோவில் நடாத்தப்பட்டதோர் அணிவகுப்பொன்றில் 3 இலட்சத்துக்குமதிகமானோர் கலந்துகொண்டனர்.

### ● வாஷிங்ரன்

60வருடகாலமாகப் பிரைஸ்பரியமதத்தவரால் பாவிக்கப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்ட தேவாலயக் கட்டடமொன்றை வாஷிங்ரன்சர்வகலாசாலையின் நியூமன் சங்கஅங்கத்தினர்கள் விலைக்குப் பெற்றுள்ளனர். இங்கு நியூமன்சங்கத்தினரின் கத்தோலிக்க கலந்துரையாடல்வகுப்புகள் நடாத்தப்படும்.

### ● நெதர்லாந்து

பிறேனேகரிலுள்ள அர்ச். மாட்டின் விசாரணைப்பங்கினர் தங்களுக்கென ஓர் ஆலயத்தைக்கட்டி முடிக்கும்வரை அங்குள்ள புரொட்டஸ்தாந்து மதத்தினர் தங்கள் தேவாலயத்தைக் கத்தோலிக்க ஆராதனைகட்கென இரவலாகக் கொடுத்துதவினர். இதற்குப் பிரதியுத்தாரமாக அர்ச். மாட்டின்தினத்தில் சேகரிக்கப்பட்ட பணம்முழுவதையும் அப்பங்கினர் புரொட்டஸ்தாந்த சமூக சேவை இயக்கத்துக்காக மகிழ்ச்சியுடன் கொடுத்துதவியிருக்கின்றனர்.

### ● நியூயோர்க்

மனித உரிமைகள்பற்றி ஆராய்வதற்கென நியூயோர்க் மேற்றிராசனத்தைச் சேர்ந்த திறமைவாய்ந்த கத்தோலிக்கர்களான நியாயவாதிகளின் குழுஒன்று அண்மையில் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

### ● மொன்றீல்

பின்லாந்துதேசத்தின் கெல்சிங்கிநகரில் நடாத்தப்படவிருக்கும் உலகஇளைஞரின் மகாநாடு முற்றிலும் பொதுவுடைமைப் பின்னணியுடன் நடாத்தப்படுவதால் அம்மகாநாட்டில் கத்தோலிக்க இளைஞர்கள் கலந்துகொள்ளக் கூடாதென முப்பது கத்தோலிக்க மாணவ இயக்கங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

### ● பிரான்ஸ்

இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பிரான்சிலுள்ள கத்தோலிக்கவாலிபரிடையே துறவறத்தைத் தெரிந்துகொள்வோரின்தொகை வீழ்ச்சியடைந்துகொண்டே வருகின்றது. அதன்பயனாக அமியென்ஸ்நகரிலுள்ள பிரசித்திபெற்ற குருமடமொன்று விரைவில் மூடப்படவிருக்கிறது.

### ● ஒகியோ

லத்தினிய அமெரிக்காவில் கத்தோலிக்க சேவையாற்றுதற்கெனப் பாப்பரசரால் திட்டமிடப்பட்டுள்ள இல்லற அப்போஸ்தலிக்கசேவையில் ஒகியோவிலிருந்தும் பன்னிருவர் இணைந்துகொள்வர். இவர்கள் பிறேசில்தேசத்தில் ஞானோபதேசவகுப்புகளை நடாத்துவதிலும், சமூகசேவையாற்றுவதிலும் ஈடுபடுவர்.

### ● போர்த்துக்கால்

கத்தோலிக்க சேவாஇயக்கத்தினர் வெளிநாடுகளில்சென்று சேவையாற்றக்கூடிய இல்லறத்தொண்டர்களைப் பயிற்றுவதற்கான திட்டமொன்றை நிறுவியுள்ளனர். இத்திட்டத்தின் பயனாகப் போர்த்துக்கால்தேசமும் விரைவில் வெளிநாடுகட்கு இல்லறத்தொண்டர்களை அனுப்பக்கூடியதாகவிருக்கும்.

### ● உரோம்

பரிசுத்த உரிமைச்சங்கம் நிறுவப்பட்டதன்பின்னால் 155புனிதர்கள் அர்ச்சியசிட்ட கௌரவமும், 116பேர் முத்திப்பேறுபெற்ற கௌரவமும் பெற்றுள்ளனரென அண்மையில் உரோமில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கைதெரிவிக்கின்றது.

தொகுப்பு: மடோனா.

---

> சேபமாலை செபிக்கும் சேவையொன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3915

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு
1. நாகலிங்கம் கனகநாயகம்
2. ஷெ ஊர் பெண் கமலாதேவி

— வழக்காளிகள்.

எதிராக, யாழ்ப்பாணம், பெரியதெரு
அல்பிறட் எற்வேட் தம்பர்

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3915-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆடு ஆடிமீ 25-ந்உ புதன்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,495-ம், ரூபா 3,000-க்கு 24-2-61 தொடக்கம், 3-8-61 வரைக்கும் 15வீதமான வட்டியும் [illegible]மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 220ரூபா 77சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிகோயிற்பற்று, கரையூர்இறை "உடையான்தறை" பர. நில. இலா. ஆறு (ப. நி. இ. 6)உம், கல்வீடும், கிணறும், மற்றும் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — டக்றர் யோண்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு — சாப்பெல்வீதி (றோட்டு) மேற்கு — எலிசபெத் இராசம்மா திசைவீரசிங்கத்துக்கும், சவரிமுத்து யோசெவ் பெண்சாதிக்கும், டக்றர் ஏ. இராசசிங்கத்திற்கும் உரியஆதனங்கள். தெற்கு — மெயின்வீதி (றோட்டு). இதடங்கலிற் சொரியலாய் நாலிலொரு ($\frac{1}{4}$) பாகம். இதன்பதிவு D 246/156.

வை. ஏரம்பமூர்த்தி,
காரைநகர் கொம்மிஷனர்.

1962-ம்ஆடு ஆனிமீ 18-ந்திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஞா. | அதிபரிசுத்த இரத்தத்தின் திருநாள் (வி. ம.) | சி |
| 2 | தி. | மரியம்மாள் மினவின திருநாள் (வி. ம.) | வெ |
| 3 | செ. | அர்ச். இரனேயுஸ் | சி |
| 4 | பு. | ம காலதினம் ( ஞாயிறு பூசை ) | ப |
| 5 | வி. | அர்ச். அந்தோனி மரிய சக்கரியா | வெ |
| 6 | வெ. | ம காலதினம் யே. | ப |
| 7 | சனி | அர்ச். சிறில் மெதோடியுஸ் ம. | வெ |

# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஆடிமாதம் 1-ந் தேதி

## தந்தையின் செங்குருதியும்......

வேதகலாபனைகளின்காலம். கத்தோலிக்கர்கள் கட்டக்கோம்புச் சுரங்கங்களில் வழிபாடு நடாத்தியதருணம். உரோமையின் திறந்த வெளிஅரங்கில் மக்கள்கூட்டம் தேங்கிவழிந்தது. மைதானத்தின் நடுவே இளைஞனெருவன் நிறுத்தப்பட்டான். கம்பீரமானதோற்றம் அவனுடையது. கட்டழகுவாய்ந்த உடலமைப்பு.

காவலனின் ஏவலர்கள் கொடிய விலங்கொன்றை ஏவிவிட்டனர் அவன்மீது. பலநாள் பட்டினிகிடந்த மிருகம் அது. பயங்கர கர்ச்சனையுடன் பாய்ந்துவந்தது. இளைஞனை நெருங்கியதும் ஒரு கணம் உற்றுநோக்கியது. பின்னர் தன்குகையை நோக்கித்திரும்பியது. மீண்டும் மீண்டும் அக்கொடிய விலங்கினை ஏவிவிட்டனர். ஆயின், அது இளைஞனுக்குத் தீங்குசெய்ய எண்ணவில்லை.

மக்கள் ஆச்சரியங்கொண்டனர். மன்னன் மாக்சீமியன் சினமுற்முன். கத்தோலிக்கர்களை வதைப்பதையே இலக்காகக்கொண்டவன் அவன். வாலிபனை உற்றுநோக்கினன். அவன் கழுத்தில் சிமிழொன்று தொங்குவதைக் கண்டான். "கழற்றியெறியுங்கள் அந்த மந்திரக்கூட்டை. அதுதான் அவனுக்கு உதவுகிறது", என உறுமினன். புலிப்பால்குடித்து வளர்ந்தவன் அந்தக் கல்நெஞ்சன்.

"மன்னர் மன்ன, இது மந்திரச்சிமிழ் அல்ல. இதேயிடத்தில் பலவருடங்கட்கு முன்னர் கிறிஸ்துவுக்காக என் தந்தை சித்திர வதைக்குள்ளானர். அன்னரின் உடலிலிருந்து ஓடிய செங்குருதியில் தோய்க்கப்பட்ட சிறுபஞ்சு இதிலுண்டு. எனது விசுவாசத்துக்கு உறுதியாக விளங்குகிறது இது" எனக் கம்பீரமாகப் பதிலளித்தான் வாலிபன்.

## ......அமலனின் திருவிரத்தமும்

பங்கிராஸ் என்ற அவ்விளைஞருக்குத் தளராத உறுதியைஅளித்தது தந்தையின் செங்குருதி. தந்தையின் உடலிலிருந்து பாய்ந்த இரத்தம் மைந்தனின் விசுவாசத்தைக் காப்பாற்றியது. அம்மைந்தன் கத்தோலிக்கத்துக்காக வீரமிக்க செயல்களில் தலையிட அது உறுதுணையாயிற்று.

எமது அன்பின் தந்தை, அமலன் யேசு இவ்விதம் தமது திருவிரத்தத்தையும் எமக்கென ஒதுக்கியுள்ளார். கல்வாரியில் அவர் சிந்திய ஒவ்வொரு துளியிரத்தமும் இவ்வுலகமக்களின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டுளது. திவ்வியநன்மைமூலம் கிறிஸ்துவின் திருவிரத்தம் எம்மைச்சேர்கிறது. அது எம்மை விசுவாசத்தில் தளரா வண்ணம் உறுதிப்படுத்தும். எமது கவலைகள் துன்பங்கள்மத்தியில் ஆறுதலளித்துத் திடப்படுத்தும்.

கிறிஸ்துநாதர் சத்தியத்தைக்காக்கத் தமது திருவிரத்தத்தைச் சிந்தினர். இன்று பல கத்தோலிக்கர்கள் கிறிஸ்துவை வழிபடும் குற்றத்துக்காக, சத்தியத்தைக்காக்க இரத்தம் சிந்திக்கொண்டிருக்கின்றனர். இந்தப்பயங்கரநிலை விரைவில் எமக்கும் நேரலாம். சத்தியத்துக்குச் சாட்சிசொல்ல, உண்மை விசுவாசத்தை மறுதலிக்காதிருக்கத் திருவிரத்தம் எமக்குத் திடனளிக்கும்.

எங்கள் பரிசுத்தகந்தை 23-ம் அருளப்பர் இன்றைய திருச்சபைக்கு உறுதுணையான மூன்று வழிபாடுகளை அண்மையில் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவின் திருவிருதயம், அவரின் திருநாமம், திருவிரத்தம் ஆகியவையே அல்லலுறுத்தும் இன்றையஉலகில் எம்மை நடாத்த, பாதுகாக்க, திடமளிக்கவல்லன.

எனவே, அடுத்துவரும் திருவிரத்தத்தின் திருநாளில் நாம் முக்கியமாகப் பிரார்த்திக்கவேண்டியதொன்றுண்டு. எமது விசுவாசத்தைத் தளரவைக்கச் சாத்தான்எடுக்கும் முயற்சிகள் பல. அவற்றிலிருந்து நாம் காப்பாற்றப்படல்வேண்டும். அவற்றின் வெளிமாய்கைகளில் நாம் மயங்காதிருத்தல்வேண்டும். அதற்கான திடத்தைத் திருவிரத்தம் எமக்களித்தல்வேண்டும்.

அவரின் திருவிரத்தம் துதிக்கப்படுவதாக.

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு

### யேசுவின் விலைமதிக்கப்படாத திருஇரத்தத்தின் திருநாள்

யேசுவின் திருஇரத்தத்தைப்பற்றி நாம் அவ்வளவாகச் சிந்திப்பதில்லை. பெயருக்குமாத்திரம் அதை ஏற்றுக்கொள்கிறோம். இந்தப் பரிதாப நிலையைநிவிர்த்தி செய்யவே பாப்பரசர் 23-ம்அருளப்பர் திருஇரத்தத்தின் பிராத்தனையை எமக்களித்துத் திருஇரத்தத்தையிட்டு எமக்கு ஞாபகப்படுத்தினர். எமது இரட்சகரின் இறப்பினதும் உத்தானத்தினதும் 19-ம் நூற்றுண்டின் விழாவின்போது பரிசுத்த பாப்பரசர் 11-ம்பத்திநாதர் திருஇரத்தத்தின் திருநாளை முதற் றாத்திருநாளாக உயர்த்தினர்.

**செபமும் போதனையும் :** ஒருநாள் எமக்காகத் தம்இரத்தத்தைச் சிந்துவதற்காக, கிறிஸ்து ஓர்முறை பெத்திலேகமுக்குவந்தார். "ஆண்டவராகிய யேசுவேவாரும்" என்று பிதாபிதாக்களும், தீர்க்கதரிசிகளும்விடுத்த ஏக்கம்நிறைந்த அழைத்தலைப் பூரணமாக நிறைவேற்றினர். மீண்டும் அவர் கடைசிநாளில்வந்து எல்லாச்சாதி சனங்களினதும் ஆவலைப்பூர்த்திசெய்வார். இன்றையப் பிரவேசக்கீதம் காட்சியாகமத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. காட்சியாகமமானது செம்மறிசிந்திய இரத்தத்தை மகிமைப்படுத்துகின்றது. பிரவேசக்கீதத்தின் இறுதியில் காணப்படும் 88-ம்சங்கீதம் பரிசுத்தஉதிரத்தின்மூலமாய் ஆண்டவர் எமக்கு அளிக்கும் கருணையைப் பற்றிப் பாடுகின்றது.

**சபைச்செபம் :** எமது இரட்சணியத்தின் பணயமாகத் திருஇரத்தம் இருப்பதால் அதைத் தகுந்தவிதமாய் ஆராதிக்க வரத்தை இறைஞ்சுகின்றது. சுவிசேஷத்தில் மீட்பரின் விலாவானது ஈட்டியால் பிளக்கப்பட்டு இரத்தமும், தண்ணீரும் வெளிவந்த குரூரக்காட்சியைக் காண்கிறோம். அவரது மரணத்தை மட்டுமன்றி அவரது அன்பையும் நிரூபிக்கின்றது இந்தக்காட்சி "அங்கிருந்து தண்ணீரும், இரத்தமும் புறப்பட்டன" எமது விசுவாசத்தின் மையமாகிய பெரிய பலியும், தேவதிரவிய அனுமானமுமாகிய திவ்வியசற்பிரசாதத்தின் அடையாளம் இரத்தம். எமது விசுவாசத்தின் பிரவேசவாயிலாகிய ஞானஸ்நானத்தைத் தண்ணீர் குறிக்கின்றது. விசுவாசமந்திரத்தை நாம் இன்று அதிகபக்தியுடன் செபிக்க வேண்டும். எமது விசுவாசம், எமது கிறிஸ்துவ சந்தோஷம், எமது நம்பிக்கை எல்லாம் கிறிஸ்து எமக்காகச் சிந்தியதிருஇரத்தத்தின் வழியாய் வந்தவையே.

**திருவிருந்து :** நாம் எமது காணிக்கையாக அப்பமும் இரசமும் அளிக்கிறோம். கானுவில் தண்ணீரை இரசமாக்கியயேசு, தமது உயிரும், அன்பும் இரண்டறக்கலந்தவை என்பதை உணர்த்தும்வண்ணம், இரசத்தைத் தன் இரத்தமாக்கினர். எம்மை ஆசீர்வதிக்கும் பாத்திரம் இதுவே. பாஸ்காவைப் புசிக்கும்போது யூதர்கள் தங்கள் நீதியின்படி நான்கு பாத்திரங்களில் இரசம் அருந்துவார்கள். யேசு மூன்றுவது பாத்திரத்தின்போதுதான் இரசத்தை தன்இரத்தமாக அபிஷேகம்பண்ணினர். இரத்தம் ஓர்கண்ணுவி, ஒருவரும் அதை விரும்புவதில்லை. ஆனல், யேசுவின் இரத்தம் விலைமதிக்கமுடியாதது; பெறுமதி வாய்ந்தது. நாம் அதை ஓர் பாத்திரத்தில் சேர்த்தெடுத்து ஆராதிக்கிறோம். ஒருமுறையில் அதைக் கடவுளின் இரத்தம் எனலாம். இன்றைய எழுந்தேற்றம் திருஇரத்தத்தின் உன்னதத்தையும், வலிமையையும் நினைவூட்டுகின்றது. நாம் அதை முடிவில்லாத தந்தைக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

திருச்சரீரத்தையும், திருஇரத்தத்தையும் புசியுங்கள். நீங்கள் நித்திய சீவியத்தைப் பெறுவீர்கள். உங்களைப் பரமஜக்கியத்திற்கு இட்டுச்செல்லும் ஒற்றுமையே இது.

கிறிஸ்து தமது உடல், ஆவி, தெய்வீகம், உதிரம் ஆதியவற்றை எமக்காகத் தத்தம்செய்யத் தயங்கவில்லை. நாமும் எமது உடல், ஆவி, இரத்தம் ஆகியவற்றை அவருக்காக அளிக்க வேண்டும்.

## ஒற்றுமைபற்றி வளர்ந்துவரும் பேராவல்

அடுத்த இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளுள் கிறிஸ்தவ சபைகளுள் ஒற்றுமை ஏற்படலாம். இஸ்பிரீத்துச் சாந்துவானவர் அதை நிச்சயமாய் நிறைவேற்றுவார் போலிருக்கிறது, எனக் கத்தோலிக்க இளைஞர் ஆண்டு மகாநாட்டில், நோர்தாம்ரன் உதவிமேற்றிராணியார் கிருன்ற் ஆண்டகை குறிப்பிட்டார். அதற்குத் திருச்சபையிலும் வெளியேயும் பல அடையாளங்கள் உண்டு.

வெளியே

1. ஒற்றுமைபற்றிய பேராவல்.
2. ஒற்றுமை உண்டாக்க அதிகாரம் ஒன்று தேவைஎனக் கத்தோலிக்கர் அல்லாதோர் உணர்கின்றனர்.
3. பிழையான மனப்பதிவுகள் தளர்ந்து, பிறசமயத்தவர் எம்மைப்பற்றிய உண்மையை அறிய முயற்சித்தல்.

உள்ளே

1. வேதாகம விவிலிய நூலைப் படிக்க ஆர்வம்.
2. திருவழிபாட்டில் விருத்தி.
3. பிறர் எம்மைத் தேடிவரார் என்ற உறுதி.
4. இரு பகுதியாருக்குமிடையில் வளர்ந்துவரும் அன்பு.

தொகை வளரவில்லை

மனந்திரும்புகிறவர்களின் தொகை வளர்ந்துவந்தாலும் சில இடங்களில் கத்தோலிக்கர்தொகை குறைந்துவருகிறது. விவாக காரணமாக மனந்திரும்புவர் தொகை மிகக்குறைவு. பலர் மனந்திரும்பாமைக்குக் காரணம் எம்மிடையே காணப்படும் பிளவுகள். விகற்பமான போதனைகளைக்காணும் பொதுமக்கள் எங்கே திரும்புவது என அறியாமற் திகைக்கின்றனர். நாம் ஒற்றுமையாயிருந்தால் ஒரே குரலொலியைச் செவிமடுப்பது சுலபம். வேதபண்டிதர் வேதசாஸ்திர உண்மைகளை நிர்ணயிக்க, கத்தோலிக்க பொதுமக்கள் நேசபாசத்தினல் ஒற்றுமை இயக்கத்தை வளர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமடுத் திருநாள்

## தேவதாயார் எலிசபெத்அம்மாளை மினவியருளினர்

### மினவுதல்:

அர்ச். எலிசபெத்தம்மாள் கன்னி மரியம்மாளின்மைத்துனி—சக்காரியாஸ் என்னும் யூதகுருவின் மனைவி. வயோதிபகாலம் அடைந்துவிட்டனர் எனினும் இதுவரையும் பிள்ளைப்பாக்கியம் கிடைக்கவில்லை. தேவன் சித்தங் கொண்டார். எலிசபெத்தம்மாள் கர்ப்பவதியானாள். இச்செய்தியைக் கேட்ட தேவதாயார் ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தார். எலிசபெத்தம்மாளைச் சந்திக்கவும் அவளுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்யவும் ஆவல் எழுந்தது. காலங்காத்திருந்தார். தமதுகஷ்டங்களைப் பொருட்படுத்தவில்லை. நெடுந்தூரப்பயணம். மலையேற்றமானவழி. எலிசபெத்தம்மாளும் கர்ப்பவதியாகி ஆறுமாசங்கள் நிறைவுற்றன. கன்னிமரியம்மாள் அங்கு சென்றாள். எலிசபெத்தின் சந்தோஷம் சொல்லுந்தரமன்று. இருவரும் கட்டிஅணைத்துக்கொண்டனர். மரியம்மாளும் மினவுதலான வார்த்தைகளைச் சொல்லி வாழ்த்தினார்.

### ஆசீர்மொழிகள்:

தேவதாயாரைக்கண்ட அத்தருணம் எலிசபெத்தம்மாளுடைய உதரத்திலிருந்தபிள்ளை தாயின் வயிற்றிலே துள்ளிற்று. அவளும் இஸ்பிரீத்துச்சாந்துவினாலே நிரப்பப்பட்டு உரத்தசப்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது:

"ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய திருவயிற்றின்கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே.

"என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்குக் கிடைத்தது எப்படி?

"இதோ நீர் வாழ்த்திய சப்தம் என் காதில் விழுந்தவுடனே என்வயிற்றில் இருந்தபிள்ளை அக்களிப்பால் துள்ளிற்று." அப்போது மரியம்மாள் வசனித்ததாவது:

"என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகிறது. என் இரட்சணியமாகிய சருவேசுரனிடத்தில் என்மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது.

"ஏனெனில், தமது அடிமையானவருடைய தாழ்மையைக் கிருபாகடாட்சத்தோடு பார்த்தருளினார். ஆகையால் இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்."

### குமாரனின் பிறப்பு:

பின்னும் தேவதாயார் எலிசபெத்தம்மாளோடு ஏறக்குறைய மூன்று மாதம் இருந்து மிகத்தாழ்ச்சியோடே வேண்டிய ஊழியங்களைச் செய்துவந்தார். பிரசவகாலமும் நிறைவுற்று எலிசபெத்தம்மாள் ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தையைத் தேவதாயார் தமது திருக்கரங்களால் ஏந்திச் சகலஆசீர்வாதமும் கட்டளையிட்டார். குழந்தை பிறந்து எட்டாம் நாள் பிள்ளைக்கு விருத்தசேதனஞ் செய்ய அவர்கள் கூடிவந்து அதன் தகப்பனுடைய நாமத்தின்படியே சக்கரியாஸ் என்று பெயரிடப்போகையில் அதன்தாய் எதிர்மொழியாக: 'அதற்கு அருளப்பன் என்று பெயரிட வேண்டும்' என்றாள். அப்போது பிள்ளையின் தகப்பனுக்குச் சயிக்கினை காட்டி அதற்கு என்ன பெயரிட வேண்டும் என்று கேட்டார்கள். அவர் ஓர் எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி அதின்பெயர் அருளப்பனென்று எழுதினார். அக்கணமே அவருடையவாய் திறக்கப்பட்டு நாவும் கட்டவிழ்க்கப்பட்டுச் சர்வேசுரனைத் தோத்திரித்தார்.

### மருதமடுமாதா:

மருதமடுப் புண்ணியதலத்திலே கொண்டாடப்படும் பிரதமதிருநாள் இதுவே. தேவதாயாரின் மினவுதலினாலே எலிசபெத்தம்மாள் பாக்கியம் பெற்றார். அவரது பிள்ளை கர்ப்பத்திலேயே பாவக்கறையிலிருந்து சுத்திகரிக்கப்பட்டது. சிறிதுகாலம் ஊமையாய் இருந்த கணவனும் பேசும்பாக்கியம் பெற்றார். தேவதாயாரின் வருகையால் இச்சலுகைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள அர்ச்சியசிஷ்ட எலிசபெத்தம்மாள் தகுதியுடையவளாய் இருந்தாள். "அவர்கள் இருவரும் ஆண்டவருடைய சகலகற்பனைகளிலும் நீதிமுறைமைகளிலும் குற்றமின்றிநடந்து தேவசமுகத்தில் நீதிமான்களாய் இருந்தார்கள்." நாமும் தேவதாயாரிடம் ஆத்துமசரீரசலுகைகளைப்பெற அவளண்டை செல்லும் போது அச்சலுகைகளைப்பெற நம்மைத் தகுதிஉடையவர்களாக்கிக் கொள்ளவேண்டும். ஆகவே, மருதமடுத்திருப்பதிக்குச் செல்லும் யாத்திரிகர்களும், மறு இடங்களில் அவரது சலுகையை நாடுபவர்களும் முதன்முதலாகக் கவனிக்க வேண்டியது தம்மைத் தேவதாயாருக்கு உகந்தவர்களாக்கும் கருமத்தையே.

### மன ஆயத்தம்

கத்தோலிக்கர் எதிரேவரும் பொதுச்சங்கத்தின் முடிபுகளை ஆர்வத்துடன் ஒப்புக்கொள்ளத் தம்மனங்களை ஆயத்தப்படுத்த வேண்டும். அவைகள் கஷ்டமான முடிபுகளாயிருக்கலாம். பண்டு தொட்டுப் பரவணியான வழிகளை விட்டுவிட நாம் விரும்பாதிருக்கலாம். எனினும் எம் மனப்பதிவுகளை நாம் மாற்றவேண்டுமெனச் சங்கம் முடிபுசெய்தால் அதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

### செபம்

பொதுச்சங்கத்தின் போதகம் வழுவாவரமுடையதெனின், பொதுச்சங்கத்திற்காகச் செபிக்க வேண்டியது ஏன்? பொதுச்சங்கம் வேதஉண்மையைப் போதிப்பதில் வழுவாவரம் உடையதென்றாலும், அவ்வுண்மைகளை மிகவும் திறமையாய்ப் போதிப்பதில் வழுவாவரமுடையதல்ல. அதற்குத் தேவஉதவி அவசியம்; ஆகவே நீங்கள் செபிக்கவேண்டும்.


## வெளிவந்துவிட்டது!

**பாலர் குறிப்பிடம்**

**பாலர்வகுப்புக்குரியது**

**விலை சதம் — 40**

**அதிபர்:**

அர்ச். சூசைமாணிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.




## மருத மடுத்தாயே

பொன்நிலவு பாதமிசை புனைகின்ற தாயே
புனிதமலர் வதனமருள் பொழிகின்ற தாயே
மின்னுகதி ராடையொடு மிளிர்கின்ற தாயே
மேதினியிற் பாவிகளை மீட்கின்ற தாயே
பன்னிருதா ரகை மகுடம் பகலொளிசெய் தாயே
பங்கயநற் செங்கைசெப மாலையொளிர் தாயே
இன்னலிடை யாதரவே ஈந்தருளுந் தாயே
எங்களையாட் கொண்டருளு மருதமடுத் தாயே.

●

புண்ணியர்கள் மனமாரப் போற்றுகின்ற தாயே
பொன்னுலக வானவர்கள் புகழ்கின்ற தாயே
கண்ணியர்கள் காதலொடு கையெடுக்குந் தாயே
கற்புநிறை லீலியெனக் காணுகின்ற தாயே
தண்ணளியுந் தண்ணொளியுந் தந்தளிக்கும் தாயே
தஞ்சமடைந் தோர்களையே தாங்குகின்ற தாயே
எண்ணரிய நன்மையெலா மீகின்ற தாயே
எங்களை யாட்கொண்டருளு மருதமடுத் தாயே.

●

சொல்லாருந் துதிபடைத்த துங்கமுள்ள தாயே
சோகமறத் துடைத்தரிய சுகமளிக்கும் தாயே
பொல்லாத தீமைகளைப் போக்குகின்ற தாயே
பொறுமையொரு வடிவமுறு புதுமையருள் தாயே
எல்லார்க்கும் மெல்லாமா யிருக்கின்ற தாயே
இளைப்பாற்றி யின்துறையாய் இலங்குதிருத் தாயே
இல்லாரைச் செல்வமிக வெய்துவிக்குந் தாயே
எங்களையாட் கொண்டருளு மருதமடுத் தாயே.

— காவலூர்ப் பொன்.

## ஆடி மகோற்சவம்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

தங்களும் போற்றுதல்களும், வானமுகட்டைப் பிளந்து விண்ணதிர ஒலிக்கின்ற தன்மையானது எவர்கண்களிலும் ஆனந்தக் கண்ணீரைவருவியாதுபோகாது.

துன்பத்தில் ஆறுதலையும், அழுகையில் தேற்றரவையும், தத்தளிப்பில் தஞ்சத்தையும், ஏக்கத்தில் இருதய சாந்தியையும்பெற்று பக்தர்கூட்டம் பரமானந்தங் கொள்ளத் தேவ திருத்தாயார் புரியும் எண்ணற்ற புதுமைகளை ஈண்டெடுத்தியம்புதல் சூரியமண்டலங்காணச் சுடர்விளக்கேற்றிய கதையாகவே அமையும்.

"உலகமுடிவிலேயே கன்னி மரியம்மாள் ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடும். உலகம் இருக்கும்வரை அவள் எப்பக்கமும் இழுக்கப்படுவாள். பலபிள்ளைகளுக்குத் தாயான ஒரு பெண்மணி மரியம்மாள். அத்தனை பிள்ளைகளையும் அவள் இடையீடின்றிக் கவனிக்க வேண்டியுள்ளது" என்று குரவர்திலகம் பியான்ஞே கூறியதற்கொப்ப காலையும் மாலையும் இடையீடின்றி மருதமடுத் திருப்பதியில் நிகழும் ஞான நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு பக்தர்குழாம் கண்ணீர்சொரிந்து அவள் கிருபைக்குக் கையேந்தி நிற்கும்நிலை எவர்மனதையும் இளக்கி உருக்கக்கூடிய காட்சியாகும்.

இங்ஙனம், திருத்தாயார் மருதமடுத்திருப்பதியில் மகிமையோடு எழுந்தருளிப் பொழிந்துவரும் ஈடிணையற்ற பேருபகாரங்களை எழுத்திலும், பேச்சிலும் வடித்தெடுக்கவே முடியாது. அவள் வலிமைகுன்றிய மனிதனின் ஊன்றுகோல். இனிமை மிக்கவள். அனைவருக்கும் அமுதமும் அன்பும் நல்குபவள். எல்லோருக்கும் எல்லாமாக அவள் இலங்குகின்றாள். எல்லோரும் அன்னையின் நிறையன்பைப் பருகும்பொருட்டுத் தன் கனிவுமிக்க உள்ளத்தை மனிதர்க்குத் திறந்து வைத்திருக்கின்றாள். கைதிகளுக்கு விடுதலையும், நோயினர்க்கு உடல் உடல்நலமும், பாவிகளுக்கு மன்னிப்பும், புனிதர்கட்குக் கடவுள் அருளும், வானதூதுவர்க்கு மகிழ்வும், தமதிரித்துவத்துக்கு மாட்சியும், கடவுளின் திருப்புதல்வனுக்கு மனிதஉடலும் தருபவள் அவளே. அவளது அன்புப்பெருக்கில் பங்குபெறாதவர் எவரும் இலர்.

எனவே, நாமும் அந்த ஒப்பற்ற தாயின் தங்கத்திருவடிகளைத் தேடி ஓடுவோம். உமதுமன்றாட்டுக்களின் உதவியைக்கேட்டு ஒருவனகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக உலகிற் கேள்விப்பட்டதில்லையே என்று ஓலமிடுவோம். வெண்நிலவைப்போல் வனப்புமிக்கவளாய், பகலவனைப்போல் ஒளியுள்ளவளாய், போர் அணியாய் வகுக்கப்பட்ட படையைப்போல் அச்சம் ஊட்டுபவளாய் அருணோதயம்போல் அதோ எழுந்துவருபவள் யார்? என்ற உன்னத சங்கீதத்துக்கு விடையிறுக்கு மரியன்னை எமக்கு அருள்மாரி பொழிந்து அடைக்கலம் தருவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பக்கம்

என் செல்வச் சிறுவர்களே! உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.

நீங்கள் ஒருகதைவாசித்தால் அல்லது ஒருநாடகம் பார்த்தால் அக்கதையில் அல்லது நாடகத்தில்உள்ள சிறந்த கதாபாத்திரத்தைப்போல நீங்களுஞ் செயலாற்றவேண்டுமென எண்ணுவீர்கள். ஒருபெரியாரின் சுயசரிதையை நீங்கள் படித்தால் அவரைப் பின்பற்றவேண்டுமென விரும்புவீர்கள். காரணம்? சிறுவர்களுக்குப் பின்பற்றுவதில் நாட்டம் மிகஉண்டு.

நீங்கள் ஒருவரைப் பின்பற்றவேண்டுமாயின் அவரை நன்கு அறியவேண்டும். அவரது வாழ்க்கைவரலாறு முழுவதும் உங்களுக்குத் தெரிந்திருத்தல் மிக அவசியம். பிறர் அவரைப்பற்றி என்னசொல்லுகிருர்கள் என்பதை அவதானிக்கவேண்டும். அவரது நண்பர்கள், பகைவர்கள் அவரைப்பற்றிச் சொல்பவற்றை அறிந்திருத்தல் மிகஅவசியம். அவரது நடை, உடை பாவனைகளிலிருந்தும், பேச்சுவார்த்தைகளிலிருந்தும் அவரை அறிந்துகொள்ளலாம். அவரது சொல்லுஞ் செயலும் இசைந்திருக்கின்றனவா? அல்லது சொல்வது ஒன்று செய்வது வேருென்ரு? இவைகள்எல்லாம் நன்குஅலசி ஆராயப்படவேண்டும். இங்ஙனம் பரிசீலனைசெய்து பார்க்குங்கால் அவர் ஓர் உத்தமராகக் காணப்படின் நீங்கள் அவரைத் தடையின்றிப் பின்பற்றலாம். பின்பற்றுவதும் அவசியம்.

நல்லவைகளை விரும்புவதும் கெட்டவைகளைத் தள்ளிவிடுவதும் மனித இயல்பு. ஒரு சுவையுள்ளபொருளை உண்ணவிரும்புவீர்கள். ஓர் அழகுள்ள பூவை உங்களுடன் வைத்திருக்க ஆசிப்பீர்கள். ஒருபெரிய அறிவாளியை நீங்கள் விரும்புவீர்கள். ஒருபெரிய தியாகியை நீங்கள் விரும்புவீர்கள். ஒரு நீதிமானை, தூயஉள்ளமுள்ளவரை, பரோபகாரியை, வள்ளலை, வீரனை, தாழ்மை பொறுமை உள்ளவரை, சொன்னசொல்தவருத உத்தமரை நீங்கள் விரும்பிப் பின்பற்ற முயல்வீர்கள். ஆனுல், ஒரு துட்டனை ஒருபோதும் விரும்பமாட்டீர்கள், பின்பற்ற முயலவும் மாட்டீர்கள்.

இத்தகைய நற்பண்புகள்எல்லாம் பூரணமாக அமைந்தஒருவர் உங்கள் மத்தியில் வசிக்கிருர். அவர் யார்? அவர்தான் நல்லயேசு. உத்தம பண்புகளின் உருவும், ஊற்றும் அவர்தான். அவர் உத்தமர்என்பதை உலகில்உள்ள எல்லாரும் — அவரைத் தேவன்என்று ஏற்றுக்கொள்ளாதவர்கள் முதலாக ஒப்புக்கொள்ளுகிருர்கள். அத்தகைய வேருெரு உத்தமரை உலகம் கண்டதுமில்லை, இனிக்காணப்போவதுமில்லை. இதற்குச் சரித்திரஞ் சான்றுபகரும். கிறிஸ்து எல்லாப்பண்புகளும் சம்பூரணமாக ஒருங்கே அமையப்பெற்றுள்ள மகான். நீங்கள் அவரை மகான்என்று மட்டுமல்ல, தேவன்என்றும் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள்.

ஆதலால், நீங்கள் பின்பற்றவேண்டியமகான் கிறிஸ்துஒருவரே என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவரைப் பின்பற்றவேண்டுமாயின் அவரை நன்கு அறியவேண்டும். சுவிசேஷம் அவரை உங்களுக்கு அறிவிக்குஞ் சிறந்தநூல். இந்நூல் சிறுவர்களாகிய உங்கள் ஒவ்வொருவர்கையிலும் இருக்கவேண்டும். அதைநீங்கள் வாசித்துச் சிந்திக்கவேண்டும்.

என் செல்வச்சிறுவர்களே! நீங்கள் கிறிஸ்துவைஅறிந்தால் அவரைக் கட்டாயம் பின்பற்றுவீர்கள். அப்போதுநீங்கள் 'கிறிஸ்தவர்கள்' என்னும் மகிமையான பெயருக்கு அருகதை உள்ளவர்கள் ஆவீர்கள். கிறிஸ்துவைப் பின்பற்றி அவருடன் உங்கள் சிலுவைகளைச்சுமந்து போங்கள். அப்போது மறுஉலகில் கிறிஸ்துவோடு நித்தியமாய் அரசாளுவீர்கள், வணக்கம்.

அன்புள்ள அண்ணு.

—*—

## பூசைப் பலியின் மகத்துவம்

கடவுளுக்கு நாம் செலுத்தும் ஆராதனையில் மிக உன்னதமானது பூசைப்பலியாகும். கல்வாரிக் குன்றிலே எமது நேச இரட்சகர் உயிர்ப் பலியாகினுர் அல்லவா? அதேபலிதான் திவ்விய பூசையின்போதும் புதுப்பிக்கப்படுகிறது.

மோட்சத்தில் உள்ள அத்தனை சம்மனசுகளும் கூட்டமாகச் செய்யும் வணக்கத்தையும், நன்றியறிந்த ஸ்தோத்திரத்தையும் விட ஒரு பூசைப்பலி தேவனுக்கு அதிக மகத்துவமான ஆராதனையாகும். உலகத்தில் இருக்கும் விசுவாசிகள் எல்லோரும் சேர்ந்து செய்யும் பாவப் பரிகாரங்களைவிட எமது பாவங்களுக்கு ஒரேஒரு திவ்விய பூசைப்பலி மேலான பரிகாரமாகும்.

பூசைப்பலியானது உத்தரிப்புஸ்தலத்திலே வேதனைப்படுகிற ஆத்துமக்களுக்கு ஒரு மாபெரும் ஆறுதலைக்கொடுக்கும். நாம் அவர்களுக்காகச் செய்யும் செப, தபங்களையும் விட, இல்லை, அவர்களுடைய சொந்த வேதனைகளையும் எமது செபங்களோடு சேர்த்தாலுங்கூட அப்படியான ஆறுதலை அடையமாட்டார்கள்.

எங்கள் நேச இரட்சகர் யேசு, அவரது உன்னதபலியின் அளவில்லாத பேறுபலன்களை அவருக்குப் பதிலாக நின்று பலிசெலுத்தும் ஒரு குருவானவர் வழியாக எமக்குத்தருகிருர். எனவே இத்தனை மகத்துவமுடைய, நன்மை உபகாரங்கள், இறைவனின் இரக்கப்பெருக்கம் நிறைந்த திவ்வியபலியில் நாம் அனுதினமும் பங்குபற்றுவது பெரும் பாக்கியமாகும்.

## நற்சிந்தனை

காதில் விழுவனவற்றை யெல்லாம் நம்பலாகாது. பொறுமையுடனும், விமரிசையுடனும் அவற்றை ஆராய்ந்து பின்னர் கடவுள் உதவியுடன் அவற்றை நிதானிப்பதே மேல்.

மனிதஇயற்கை பெலவீனமுள்ளது; நன்மையைவிடத் தின்மையில் அதிக நாட்டமுள்ளது.

பரபரப்புடன் செயலாற்றுகிறவனும், தன்சொந்த அபிப்பிராயத்தில் மிதமிஞ்சிய பிடிவாதமுள்ளவனும் விவேகமற்றவன்.

பிறர் சொல்வதையெல்லாம் எளிதில் நம்புகிறவனும், அவற்றை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறவனும் ஞானமில்லாதவன்.

தன் சொந்த அபிப்பிராயத்தைப் பின்பற்ருது, ஞானமும் தூயஇருதயமும் உள்ளவர்களின் புத்திமதியைக் கேட்டுநடக்கிறவன் விவேகமுள்ளவன்.

ஞானத்தினுலும், விவேகத்தினுலும் வழிநடத்தப்படுகிறவன் கடவுளுக்கு உகப்பானவன்.

கடவுள் சித்தத்துக்குப் பணிந்து நடக்கிறவன் சிறந்த அறிஞனுகவும், மனநிம்மதி உள்ளவனுகவும் இருப்பான்.

கடவுளை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள்.

# வினுவிடை அரங்கு

(1) அசோக சக்கரவர்த்தி இந்தியாவில் ஆட்சிபுரிந்தகாலம் எது?

(2) சீனப்பெருமதில் எப்போது கட்டிமுடிக்கப்பட்டது?

(3) இங்கிலாந்தில் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் எது?

(4) இலங்கையின் பூர்வகுடிகள் யார்?

(5) துவிச்சக்கரவண்டி முதன்முதல் பயன்படுத்தப்பட்டது எப்போ?

(6) தேனீக்கு எத்தனை இறக்கைகளுண்டு?

(7) வெந்நீரூற்றுக்களில் மீன்கள் வாழ்கின்றனவா?

(8) 'கிறீனிச்' நேரத்திலிருந்து இலங்கைநேரம் எத்தனைமணித்தியாலம் முந்திப்போகின்றது?

(9) சினிமா பார்க்கப்போவது பாவமா?

(10) நான்கெட்டு நரகத்துக்குப் போவேன் என்று கடவுளுக்குத் தெரிந்தும் ஏன் என்னைப் படைத்தார்?

விடை 7-ம் பக்கம் பார்க்கவும்.

## மடு மாதா அருள் வேண்டல்

(பெனடிக்ரா. A)

இராகம்: கன்னங் கறுத்த கிளி...

பல்லவி

செபமாலை இராக்கினியே செல்வ மடு
நாயகியே
சேயர் எங்கள் தாய்நீரே — அம்மா
சேயர் எம்மை ஆதரியே — செபமாலை..

அநு பல்லவி

அண்டி வரும் மக்களை நீ
அன்புடனே அரவணைத்து — ஓ...
அருள் ஈந்து ஆதரிப்பாயே — என்றும்
அடியோர் என்று ஏற்றிடுவாயே
—செபமாலை...

சரணங்கள்

ஆடி இரண்டாந் தேதியிலும்
ஆவணி பத்தைந்தினிலும்
ஆண்டு தோறும் வந்திடுவோமே
—உந்தன்
ஆலயத்தைக் கண்டிடுவோமே
தாரும் தந்து காரும் உந்தன்
தயை வழிதனைப் பேணி நடப்போம்
நித்தம்
தாரும் தந்து காரும் எங்களை — செப...

2

வேண்டிடும் நல் வரமீந்து
வேத ஞான குணமீந்து — ஓ...
வேதாள பகை நீங்கவே — என்றும்
வேண்டிடுவீர் யேசுவிடம்
தாரும் தந்து காரும் உந்தன்
தயை வழி தனைப் பேணி நடப்போம்
— நித்தம்
தாரும் தந்து காரும் எங்களை — செப...

3

இரக்கத்தின் ராக்கினியே
இயேசுவின் நற்ருய் நீரே ஓ ...
இரங்கிடுவீர் பாவிகட்கு — அம்மா
இரந்திடுவீர் மைந்தனிடம்
தாரும் தந்து காரும் உந்தன்
தயை வழிதனைப் பேணி நடப்போம்
— நித்தம்
தாரும் தந்து காரும் எங்களை — செப...

## பரிசுத்ததனம் எதில்? எவரில்?

உலகசெல்வங்களையும், கீர்த்திப்பிரதாபங்களையும் மாதாவாகிய எங்கள் திருச்சபை ஒருபொருட்டாகக் கணிப்பதில்லை. ஆத்துமசுத்தம், சாங்கோபாங்கம், அனலானதேவஅன்பு, செபம், தாழ்மை, தபம், தானம், தருமம், தியாகம் இவைகளையே கருந்தனமாக மதித்துத் திருச்சபை தனது பிள்ளைகளுக்கு என்றுமே காட்டிப்படிப்பித்துவற்புறுத்துவது. ஆனதினுலன்ருே எத்திறத்தினருள்ளும திருச்சபையிலே அர்ச்சியசிஷ்டர்களைக்காணலாம். எந்தநிலைபரத்தில் உள்ளவர்களும் சிட்டர்களாக வருவதற்குத்தடையில்லை. அரசர்கள்மாத்திரமல்ல, பிரசைகளும், அரசிகள்மாத்திரமல்ல பணிப்பெண்களுமே! அர்ச். அன்ரேணிக்கஸ் ஒரு நாவிதனுய் இருந்தார்; அலெக்சாந்தர் விறகுதறிக்கும் கூலிவேலைக்காரன்; உவில்பிறிட் அப்பக்காரன்; வாறுஸ் மறியல்வீட்டுச் சேவகன்; ஒடிருன் சாரதி; ஒமொபோனே கடைக்காரன்; அகத்தா அடுக்களை வேலைக்காரி; மார்த்தா சமையற்காரி; ஸிற்ரு வீட்டுப்பணிப்பெண்; லூப்புஸ், லவுறேன்சியா, சத்தூர்நீனுஸ் அடிமைகள்.

சிட்டர்கள் ஆவதற்குத் துறவறம் உன்னதமானவழியென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனுல், இது இன்றியமையாததல்ல. நம்மைக் கடவுள் வைத்த அந்தநிலைபரத்திலேயே நாம் சிட்டர்களாகவேண்டுமென்பதுதான் தேவசித்தம்.

(ஞ. அ. எழுதிய பஞ்சமலர் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

புத்தக மதிப்புரை

## நானே குற்றவாளி!

**ஐந்து அங்கமுள்ள நாடகம்**

ஆக்கியோன்—வண. சுவாமி எல். டெசி, ஓ. எம். ஐ.

பதிப்பகம்— அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்,

விலை-பிரதிசதம்—75.

கிடைக்குமிடம்— பதிப்பகம்— சந்தானுள்கோவில், மானிப்பாய்.

அப்பயங்கரஇரவிலே சாமிநாதரென்ற அந்தவயோதிகரைச் சந்திக்கப்போனவர் யார்? இருவருக்குமிடையே சச்சரவேற்படக் காரணமாயிருந்தது என்ன? களவு களவென்று யார்சொன்னுர்? களவுசெய்யவில்லையென்று யார்கூறினுர்? கோபம் பாவமாயிருந்ததா? கொலைசெய்தவர் யார்? கொலையுண்டவர்யார்? கொலைகாரன் எந்தக்குருவானவரிடம் பாவசங்கீர்த்தனஞ்செய்தான்? கொலைசெய்தவன் தப்பிக்கொள்ள, சுவாமியாரின் தம்பியான குருசுவாமியார் கொலைக் குற்றவாளியாகக்கண்டு கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படக் காரணம்என்ன? அந்தஆயிரம்ரூபாவின் மர்மம்யாது? பாவசங்கீர்த்தன இரகசியத்தைக் காப்பாற்றுகிருர் தமையனுர். பலியாகிருர்? குற்றவாளி எப்படி வெளிப்படுகிருன்? "நானே குற்றவாளி" என்ற இந்நாடகத்தைப் படித்தாலென்ன, நடித்தாலென்ன, பாவசங்கீர்த்தன இரகசியப்பலி சம்பந்தமான இந்நூல் எவரையுமே பிரமிக்கச்செய்வதும், எவர் மனதையுமே மெழுகுபோல் உருகச்செய்வதுமாகும். கல்விமானுன குரவர்ஒருவர் அளித்திருக்கும் மதிப்புரையே இதன் அருமையை எடுத்துக்காட்டப் போதியது. நமக்குஉதவிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தொண்டு இதழ்

# திருக்குறள் ஓர் அறநூல்

(கொழும்பு, தமிழ்ச்சங்க ஆதரவில் நிகழ்ந்த பட்டிமண்டபத்தில் வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், பீ. ஏ. அவர்கள் வழங்கிய கருத்துரை.)

ஒப்புயர்வற்ற நூல்எனப் பன்மொழி அறிஞர்களாலும் புகழப்படும் திருக்குறள் அறநூலா? அன்றேல் இலக்கியமா? எனச் சொற்போர்புரிய நாம்இங்கு கூடியுள்ளோம். 'அறம்' வெல்வதைத் தடுக்கமுடியாத காரணத்தால் யான் திருக்குறள் ஓர்அறநூல்என வாதிட முன்வந்துள்ளேன்.

ஒருநூலை நாம்அறிவதற்கு ஏதுவாயிருப்பது நூலின்பாயிரம் அல்லது முகவுரையாகும். ஒருவரின் முகத்தைப் பார்த்து அவரை இன்னாரென நாம் அறிந்துகொள்வதுபோல நூலின்முகவுரையைப்பார்த்து அந்நூல் எப்படிப்பட்டதுஎன நாம் அறிந்துகொள்ளலாம். நுண்பொருட்டாகிய நூலுக்குப் பருப்பொருட்டாகிய பாயிரம் இன்றியமையாதது எனவும், கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும், ஞாயிறும் போலவும், தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட ஓவியம்போலவும் பாயிரம் விளங்குகிறதெனப் பழையபுலவர் கூறுகின்றனர். வள்ளுவர் தம் திருக்குறளில் பாயிரத்தில் அறன் வலியுறுத்தல்என ஓர்அதிகாரம் வகுத்துள்ளாரல்லவா? எனவே, வள்ளுவர் ஒருநீதிநூலை, அறநூலை நமக்குஅளிக்க விரும்பினாரன்றி ஓர்இலக்கிய நூலை அவர் சமைக்க விரும்பவில்லையென்பது கண்கூடுஅன்றோ! திருவள்ளுவரின் இந்நோக்கம் மூன்றுபாலிலும் இழையோடிருப்பதைப் பலஎடுத்துக்காட்டுகளால் தெருட்டமுடியும்.

எதிர்க்கட்சித்தலைவர் அழியாவரம் பெற்ற உலக இலக்கியம் திருக்குறள் என்றார். அழியாவரம் இலக்கியங்கட்கு மாத்திரம் உரிய தனிச்சிறப்பு அல்ல. கணிதம், உதாரணமாக யூக்ளிட்டின் வரைவிலக்கணங்கள், தத்துவம் தமுலாந் துறைகளிலும் அழியாவரம் பெற்ற நூல்கள் உண்டு. ஏன்? எங்கள் கச்சேரிகளில் பழைய காணி உறுதிகள் பலஉண்டே! திருக்குறளை உலக இலக்கியம் என்றார் அவர். இக்கூற்றை எப்படி நிறுவுவாரோ தெரியவில்லை. ஒருநூலைப் பலமொழிகளில் மொழிபெயர்த்து விட்டாலஃது உலக இலக்கியமாகிவிடுமா? திருக்குறளில் காணப்படும்அறக்கருத்துக்களே வீரமாமுனிவரையும், போப்பையரையும், அல்பேட் சுவைச்சரையுங் கவர்ந்தன. இவ் அல்பேட் சுவைச்சர் தாம் எழுதிய "இந்திய எண்ணமும் அதன் வளர்ச்சியும்" என்னும் நூலில் கூறுவதைச் சற்றே செவிமடுத்துக் கேளுங்கள். "ஏறக்குறைய மிகப் பழைய காலத்திலேயே இந்தியப் பொதுமக்களது அறத்தில் செயப்பாட்டு அன்புநிலை என்றகருத்துத் தோன்றியுள்ளது. இதனை இந்திய இலக்கியத்தில் நாம் காணும் பல கதைகள் வழியாகவும் சிறப்பாக கி. பி. 2ஆம் நூற்றுண்டினைச் சேர்ந்ததென நம்பத்தக்க குறளில் கிடைக்கும் அறவுரைகள் வழியாகவும் நாம் அறிவோம்." சுவைச்சர் அறவுரைகள் எனக் கூறுவதொன்றே அது அறநூல் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

மேனாட்டுத் திறனாய்வாளர் இலக்கியத்துக்கு வகுக்கும் இலக்கணங்களில் அணிவகையில் குறள்கள் பல அழகாக விளங்குகின்றன என்னும் ஒரேயொரு குறிப்பால் அதனை இலக்கியமென்பது பொருந்தாக் கூற்றாகும். ஒருபொருளில் மிகையாக என்ன உண்டோ, அவ்வாறு மிகையாக உள்ளதிலேயே அப்பொருள் அறியப்படும். அப்படிப் பார்ப்பின் திருக்குறளை ஓர் அறநூல் என்றே சொல்லவேண்டும்.

மனுஸ்மிருதி, பகவத்கீதை என்பன வடமொழியிலும், தம்மபதம் பாளிமொழியிலும், கிறித்து வழிகாட்டி இலத்தீன் மொழியிலும் விளங்குவதைப் போன்று தமிழிலும் திருக்குறள் அறநூலாகவே விளங்குகின்றது.

திருக்குறளில் அறத்துப்பால் அறத்தையே போதிக்கின்றது. பொருட்பால் அரசநீதி முதலிய அறங்களைப் போதிக்கின்றது. இன்பப்பாலும் தலைமகன், தலைமகள். அறங்களையே போதிக்கின்றது. நாலடியார் நீதி நூலாயின் திருக்குறளும் அத்தன்மையதே. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் வழக்கில் திருக்குறள் நாலடியாரோடு ஒப்பிடப்படுவது இதனை வலியுறுத்துகிறதல்லவா?

## கோட்டு விற்பனவு
## விளம்பரம்

வட்டுக்கோட்டை கிழக்கு
1. செல்லப்பா இராசதுரை
2. பெண் மகேஸ்வரி

— வழக்காளிகள்.

எதிராக

வட்டுக்கோட்டை மேற்கு நாகமுத்து முருகேசு கைம்பெண்மனோன்மணி தானாகவும் தனதுகணவனின் கோட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாரி

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 4227-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகளை 1962-ம்ஆண்டு ஆடிமீ 21-ந்உ சனிக்கிழமை பிற்பகல் 4, 4½மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் ரூபா 1,409-52. இதற்கு 1-9-61 திகதிதொடக்கம் 25-11-61 திகதிவரைக்கும் 8 வீதவட்டியும், இதற்குப்பின் இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 238 சதம் 95.

### காணிகளின் விபரம்

1. வட்டுக்கோட்டை கோவிற்பற்று, வட்டுக்கோட்டை கிழக்குஇறை வெல்லைப்புலம் நெற்பரப்பு $7\frac{3}{4}$. இதில் தெற்குப் பக்கமாக நெற்பரப்பு $3\frac{3}{8}$. எல்லை: கிழக்கு — சுப்பிரமணியம் கிருஷ்ணபிள்ளைக்கும், தம்பியாருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு — நாகமுத்து கார்த்திகேசுவுக்குரிய ஆதனம். மேற்கு — நாகமுத்து கந்தையாவுக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு — கணவதிப்பிள்ளை கைம்பெண் நாகம்மாவுக்குரிய ஆதனம். இதடங்கலும் விற்கப்படும்.

2. வட்டுக்கோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டை கிழக்குஇறை, மருக்காரம்பிட்டியும், தில்லையடலும் நெற்பரப்பு 20. எல்லை: கிழக்கு — கதிரவேலுவுக்கும் பெண் தெய்வானைக்குமுரிய ஆதனம். வடக்கு — கந்தையா விசுவநாதனுக்குரிய ஆதனம். மேற்கு — சின்னத்தம்பி பொன்னையாவுக்குரிய ஆதனம். தெற்கு — அப்புத்துரை கைம்பெண் நாகமுத்துவுக்குரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாம் $\frac{11}{16}$பங்கு விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

சித்தங்கேணி, 17-6-1962.

## திருமண
## வெள்ளி யூபிலிவிழா

நிகழ்மதி ஆனித்திங்கள் 23-ந் திகதி சனிவாரம் தங்கள் திருமண வெள்ளிவிழாவைக் கண்டு களிக்கும் பாக்கியம்பெற்ற அ. செபஸ்தியாம்பிள்ளை பவுலீனு தம்பதிகள் தங்களின் 25-ம் வருடவெள்ளி யூபிலிவிழாவைக் கண்டு களித்து அமைதியாகக் கொண்டாடினுர்கள்.

அன்றுதினம் காலை $5\frac{1}{2}$ மணிக்கு யூபிலித்தம்பதிகளும், புத்திரர் புத்திரிகளும், உறவினர்களும், அன்பர்களும, பலபக்தர்களும் குழுமியிருக்க அர்ச். புதுமைமாதாவின் தேவாலயத்தில் வணக்கத்துக்குரிய குருப்பிரசாதியவர்கள் ஆசாரவஸ்திரங்கள்அணிந்து சருவேசுரனுக்குப் பாட்டுப்பூசைப்பலி ஒப்புக்கொடுத்து யூபிலித்தம்பதிகளை ஆசீர்வதித்தார்.

அதன்மேல் யூபிலித்தம்பதிகள் குருமனைசெல்ல வணக்கத்துக்குரிய சார்வே சுவாமியார் அவர்களை வரவேற்று உபசரித்து யூபிலிச் சோபனங்கூறி மெய்விவாகக்கடமைகள் குறித்துச் சுருக்கமாகச் சொற்பொழிவாற்றிப் புகழ்மாலை சூட்டிச் சகலரையும் ஆசீர்வதித்தார். ஈற்றில் யூபிலித்தம்பதிகள் இல்லத்தில் நடந்த சிற்றுண்டி உபசரிப்போடும் அன்பர்கள், அபிமானிகள், உறவினர்களின் வாழ்த்துக்களோடும் யூபிலிவைபவம் இனிதே முடிவுற்றது.

1. அசோக சக்கரவர்த்தி இந்தியாவில் ஆட்சிபுரிந்தகாலம் கி. மு. 264தொடக்கம் 227வரைக்கும்.
2. சீனப்பெருமதில் கி. மு. 214-ல் கட்டிமுடிக்கப்பட்டது.
3. 'ஒக்ஸ்பேட்' பல்கலைக்கழகம். இது கி. பி 1167-ல் ஆரம்பிக்கப்பட்டது.
4. இயக்கர், நாகர், வேடர் இவர்கள்தான் இலங்கையின் பூர்வீகக்குடிகள்.
5. துவிச்சக்கரவண்டி முதல்முதல் பயன்படுத்தப்பட்டது 1840-ம்ஆண்டில்
6. தேனீக்கு இரண்டுசோடி இறக்கைகளுண்டு.
7. வாழ்கின்றன.
8. 'கிறீனிச்' நேரத்திலும் இலங்கைநேரம் ஐந்தரைமணித்தியாலங்கள் முந்திப்போகிறது.
9. சினிமாவில் வேதவிசுவாசத்துக்கு அல்லது நல்லொழுக்கத்துக்கு விரோதமான அல்லது பாவச்சோதனைக்குக் காரணமான அம்சங்கள் இருக்குமாயின் அத்தகைய சினிமாப்படங்களைப் பார்ப்பது பாவமாகும். விசுவாசத்துக்கும், ஒழுக்கத்துக்கும் இடறல்இல்லாத நல்லசினிமாப்படங்களைப் பார்ப்பது பாவமில்லை. எனினும், அடிக்கடி சினிமாவுக்குப்போவது நல்லதல்ல. ஏனெனில், உல்லாசங்களின் மேலுள்ளஆவல் ஆசாபாசங்களைத் தூண்டும். அவ்வாசாபாசங்கள் கடவுளையும், அவரின் போதகங்களையும் அலட்சியம்செய்யப் பண்ணும். கடமைகளைச் செய்வதிலுள்ள மனவேகத்தைக்குறைத்து அசமந்தத்தை உண்டுபண்ணும். ஆதலால், நல்லசினிமாப்படங்களைமுதலாக அடிக்கடிபார்ப்பது உசிதமன்று.
10. நீ கெட்டு நரகத்துக்குப் போவாய்என்பது கடவுளுக்கு இயல்பாகவே தெரியும். ஏனெனில், கடவுளுக்கு எல்லாந்தெரியும். நீ நரகத்துக்குப்போவது அவருக்கு விருப்பமில்லை. உன்னை மோட்சத்துக்காகத்தான் படைத்தார். நீ மோட்சஞ்சேர்வதற்குத் தேவையான எல்லா வரப்பிரசாத உதவிகளையும் உனக்குத் தாராளமாகக் கொடுக்கிறார். கடவுள் உன்னைச் சுதந்தசுயாதீனமுள்ள ஒரு மனிதனைகப் படைத்திருக்கிறார். உன்னைப் படைப்பதும், படையாது விடுவதும் கடவுளின் சுயாதீனமான ஒருசெயல். உன்னைப்படைப்பது கடவுளுக்கு விருப்பம். அவர் உன்னைப் படைக்குமுன் நீ ஒன்றும்இல்லை. உன்னைப் படைத்தபின்தான் நீ சுயாதீனமுள்ள ஒருமனிதன்.

நீ தம்முடைய விருப்பப்படி நடக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன்தான் கடவுள் உன்னைப்படைத்தார். ஆனால், நீ கடவுளின் விருப்பத்துக்கு மாறாகப் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறாய். சிருட்டியாகிய உனக்குக்கொடுத்த சுயாதீனத்தைக் கடவுள் மதிக்கிறார். நீ உன் விருப்பப்படி பாவத்தைக் கட்டிக்கொள்ளும்போது கடவுள் உன்னைப் பலவந்தமாகத் தடுக்கமாட்டார். நீ அங்ஙனம் பாவத்தைக் கட்டிக்கொண்டதால், பாவத்தின் தண்டனையாகிய நரகத்துக்குப் போகிறாய். ஆதலால், நீ கெட்டு நரகத்துக்குப்போவது கடவுளின் குற்றமல்ல, உன்னுடைய குற்றம்என்பதை மறவாதே.

வில்மட் ஆசீர்வாதம் அவர்களின்
## முதல் வருட
## பிரிவு ஞாபகம்



தோற்றம்: 21-7-1907
மறைவு: 5-7-1961

அன்புமிகும் கணவராய்,
எனது நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய்,
எனதுயர்வுப்
பயிருக்கு மழையாய்
வாழ்ந்தீர்!

பரதவிக்க என்னைவிட்டுப் பரகதியை நீர்நாடிப் பறந்து, இன்று ஒருவருடம். ஆனாலும், உருகும் எனதுள்ளத்தில் நிதம் உயிர் வாழ்கின்றீர்.

துயருறும் மனைவி:
பேபி வில்மட் ஆசீர்வாதம்
32, கோவில்வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவின் திரு இருதயம்— எங்கள் நேச அன்பன்

கடவுள் எங்கள்மேல் கொண்ட அன்பு அதிகரித்திருக்கின்றது. அதே போல் எங்களுடைய அன்பும் ஓர் பலம் வாய்ந்த அணைபோல் இருக்கவேண்டும்.

அன்றொருநாள். காலமோ மாரி காலம், சாயந்தரவேளையிருக்கும். 27 வயது உள்ள ஓர் இளம் கன்னியாஸ்திரி கோயிலுக்குள் செபித்துக்கொண்டிருந்தாள். அந்த நேரத்திலே ஓர் மனித உருவம் துக்கசாகரத்துடன் அக்கன்னியாஸ்திரி முன்பாகத்தோன்றியது. ஆம், அவர் யார்? அவர் தான் நம்யேசுபெருமான். அவருடைய முகம் அழகாகச் சூரியனைப்போல் பிரகாசித்தது. அவருடைய கைகளிலும் கால்களிலும் உள்ள திருக்காயங்கள் ஐந்து சூரியனைப்போல் தோற்றமளித்தது. அவர் தமது மார்பை மறைத்திருக்கும் உடையை அகற்றி தமது இருதயத்தை வெளிப்படுத்தினார். அவ்விருதயத்தில் இருந்து அனலும் வெளிச்சமும் ஒரு சூளையில் இருந்து வருமாப்போல் இருந்தது. அப்பொழுது அவரது அழகான உதடுகளிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

"இதோ மனிதரை அந்தியந்தவிதமாய் நேசிக்கும் இருதயத்தைப்பார். இந்த இருதயமானது மனிதஅன்பால் துடிக்கின்றது. அந்த அன்புக்காக இவ்விருதயத்தில் இருந்து எரிந்துகொண்டிருக்கும் அன்பை வைத்திருக்கமுடியாது. ஆனபடியினால் இவ்வன்பை மனிதரை நேசிப்பதற்கு வரப்பிரசாதங்களாகப் பொழிய வேண்டும்."

இந்த வார்த்தைகள் முடிந்ததும் காட்சியும் மறைந்தது. ஆம், இக்கன்னியாஸ்திரிதான் அர்ச். மார்க்கரீத் மரியம்மாள்.

அன்பு சொற்களைவிட செய்கைகளினுல்தான் அதிகமாக வெளிப்படுத்தப் படுகின்றது. ஒரு சினேகிதன் தன் சினேகிதனுக்காக உயிரைக் கொடுப்பதிலும் பார்க்க வேறு சினேகம் ஒன்றும் இல்லை. இதைக் கிறிஸ்து நிறைவேற்றினார். சொற்கள் சொல்லப் படலாம். ஆனால், அவைகள் செயல்களினுற்றன் உறுதிப்படுத்தப்படலாம். ஆகவே கடவுள் எங்களை நேசிப்பாரானால் அவருடைய செயல்களும் சொற்களைப்போல் நேசம் பொருந்தியதாக இருக்கவேண்டும். ஒரு தாயானவள் தன் பிள்ளையை எப்படி நேசிக்கிறாளோ அதிலும் பார்க்கக்கடவுள் எங்களை நேசிக்கிறார். எல்லாவற்றிற்கும் முதலாக எங்களை உண்டாக்கினார். இரண்டாவதாக மெய்யான திருச்சபையில்சேர்த்து அதிலிருந்து எங்களை மேலும் மேலும் விசுவாசத்தில் திடப் படுத்திக்கொண்டு வருகிறார்.

ஒவ்வொரு "எலெக்றனை"யும் நடாத்திக்கொண்டுவரும் அப்பரமனின் உதவியினுற்றன் எங்களது கைகளையோ கால்களையோ அசைக்கமுடியும். சத்தியவேதாகமத்தின் மூலம் தமது அன்பைக்காட்டுகிறார். எங்களை உண்டாக்கினவுடன் தானே நேசித்தார். ஏனெனில், "உன்னை உண்டாக்கியதிலும்பார்க்க வேறு அன்பு இல்லை" என்று சொல்லுகின்றார்.

கிறிஸ்து உயிர்களெல்லாம் துன்பக் கடலினின்று இன்பக்கரை ஏறுதல் வேண்டும் என்னும் பெருங்காதலுடையவர். காதலின் முழுமையே அன்பு. ஆம், இவ்வன்பு எங்கிருந்து வருகின்றது? அவருடைய ஓர் இருதயத்தில் இருந்தல்லவா?

அது மாத்திரமல்ல நீங்கள் அயலவனிடம் அன்பு கூருங்கள் என்றார். அவர் மேலும் சென்று பகைவனிடத்தில் அன்புகூருங்கள் என்றார். இதுவே சினேகத்தின் அறிகுறி. இந்தநேசத்தைக் கிறிஸ்துபெருமான் சாதனையிலும் காட்டினார். அவரைச் சிலுவையில் அறைந்து அவரைப்பரிகாசம் பண்ணின அக்கொடியவர்களிடத்திலும் அவ்வன்பைக் காட்டினார். ஆம், அவர் சொன்னதென்ன? "பிதாவே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்." இவ்வருள் மொழி எங்கிருந்து வந்தது. அன்பின் அன்பு என்னே! ஒருவனிடத்தில் அன்பு இருந்தால் அவனிடத்தில் தியாகம் இருப்பது இயல்பு.

கிறீஸ்துவே அன்பு — அன்பின் முழுமை—அன்பே அவர். ஒருவன் பொன்னை அளிப்பான், பொருளை அளிப்பான், நிலத்தை அளிப்பான், அரசை அளிப்பான். ஆனால், உயிரை அளிப்பானே. உயிரை அளி என்றவுடன் சிந்தனைக்கடலில் ஆழ்ந்துவிடுகிறான். கிறிஸ்து பெருமான் தமது அன்பர்களுக்காக என்னத்தைத் தியாகம் செய்தார். தம் ஆருயிரைத் தியாகம்செய்தார். எவர் பொருட்டுத் தியாகம் செய்தார்? தம் அன்பர்களாகிய எங்களுக்காகத் தியாகம்செய்தார். நம்மீது வைத்த அன்பானது அவரை இன்பமுடன் உயிர்துறக்கச் செய்தது. ஓருயிர் தனக்கினிய இன்னும் ஒருயிர்க்காகத் தியாகம் செய்வதைக் காண்கிறோம். ஆனால், இவைகள் எல்லாம் காமியஅன்பு; கட்டுப்பட்ட அன்பு. ஆனால், கிறிஸ்துவின் அன்பு நிட்காமிய அன்பு; கட்டற்ற அன்பு. ஆகவே, நம்மேல் கொண்ட பெரும் அன்புக்காக தம்மைத்தியாகம் செய்தார். இந்தஅன்பு எங்கிருந்துவந்தது? அவருடைய இருதயத்தில் இருந்தல்லவா வந்தது?

எனவே நாம் அவரின் அன்பாராவோம். தொண்டராவோம், தியாகிகளாவோம்.

**பே. ம. இம்மனுவேல்**

---

● ஸ்பானியதேசத்தின் எதிர்கால அரசரென்று அறியப்படுகிறவரான ஜ[illegible]ான் கார்லோஸ்இளவரசர் சமீபத்தில் திருமணஞ்செய்துகொண்ட கிரேக்கதேச சோபியா இளவரசி சென்றமாதம் கோர்பியூஎன்ற கிரேக்க தீவில் தனதுதேன்மதியின்போது கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்ளலாயினர். முக[illegible]னே இவர் கிரேக்கபிரிவினைச்சபையைச் சேர்ந்தவராயிருந்தார்.

● 1964-ம்ஆண்டிலே அமெரிக்கா சந்[illegible]னுக்கு மனிதரை அனுப்பக் கூடியதாய் இருக்கும்; ஆனால்,அவர்கள் பூமிக்குத்திரும்பி அனுப்பப்படுவதை வேண்டாதிருந்தால் என்று அமெரிக்க வானவெளி விஞ்ஞானியான திரு. ஜோன் கொட் அன்று புதன்கிழமை லொஸ் ஆஞ்சேல்ஸ் நகரில் நிகழ்த்தியசொற்பொழிவில் தெரிவித்திருக்கின்றார்.

● கருதினல்மார்திருச்சங்கத்திலுள்ள கருதினல்மார்களிலெல்லாம் அதிககாலங்கண்டவரும், வத்திக்கானின் நிர்வாகஅதிகாரிகளில் ஒருவருமான கருதினல்மொருேஞேஆண்டவர் தமது 90-வதுபிறந்தபெருநாள் சமீபத்தில்வந்தபோது நேப்பிள்ஸ் நகரின் சுற்றுடலிலுள்ள தாம்பிறந்த பட்டினத்தைத் தரிசித்து அதனைக் கொண்டாடினர்.

● "சமாதானத்திற்கு அணு" என்ற அடிப்படையிலே அமெரிக்காவுடன் முதலாவதுஉடன்படிக்கை செய்துள்ளநாடு துருக்கியாகும். இந்த உடன்படிக்கையின் விளைவாக இஸ்தம்பூல்நகரில் அணுச்சக்திநிலையம்ஒன்று ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. இதில் உற்பத்தியாகும் அணுச்சக்திமுழுவதும் நாட்டின[illegible] தான காரிய[illegible] தப்படும்.

# பேசும் பேனு

## பிரமுகர் யார்?

சென்றவாரம் யாம் கேட்ட வினுவுக்குப் பல விடைகள் வந்திருந்தன. சரியான விடை திருமதி ஜாக்குலின் கென்னடி என்பதாகும். அமெரிக்க அதிபரின் பாரியாரான திருமதி கென்னடி அண்மையில் பாப்பரசரைச் சந்தித்தபோது பாப்பரசர் உமது கணவரும், புதல்வனும், நாமும் அர்ச். அருளப்பரின் பெயரைக் கொண்டிருக்கிறோம் எனக் கூறினர். சரியான விடையனுப்பியோரின் பெயர்கள் இங்கு தரப்படுகின்றன. இவர்கட்கு கத்தோலிக்க சஞ்சிகைகள் சில அனுப்பிவைக்கப்படும்.

அன்ரனி மோத்தா—பலாங்கொடை
யூலியா மோத்தா—பலாங்கொடை
செபஸ்தியாஸ்ராஜ் பறுணந்து—கொட்டாஞ்சேனை
இரேனியா சில்வேரா—கொழும்பு, 14
எவ். சென்றேச்—யாழ்ப்பாணம்
மேரி அன்னமலர் பற்றிக்—காவெட்டி
மாகரேட்மேரி ஜோசப்—தெல்தெனிய
யா. றேசலின் குரூஸ்—பேசாலை
யா. மிக்கேலா பறுணந்து—பேசாலை

## அடுத்த வினு

பரிசுத்த பாப்பரசர் அளிக்கும் மகிமைவிருதுகளில் மிக உயர்ந்தது கிறிஸ்துவின் முதன்மை அணி என்னும் கௌரவமாகும். கடைசியாகப் பாப்பரசரிடமிருந்து இக்கௌரவத்தைப் பெற்றுக்கொண்டவர் யார்? இக்கௌரவத்தைப்பெற யாருக்குத் தகுதி உண்டு?

இவ்வினுக்கட்கான சரியான விடையை அஞ்சல் அட்டையில் எழுதிப் பேசும்பேனு, சத்தியவேத பாதுகாவலன், அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முடிவு தேதி 7-7-62.

## விளையாட்டுப் போட்டி

சென்ற வார இறுதியில் இளவாலை புனித என்றியரசர் கல்லூரியினரின் விளையாட்டுப்போட்டி சுற்றுவட்டத்திலுள்ள கிராம மக்களனைவருக்கும் நல்விருந்தாக அமைந்தது. யாழ்ப்பாண பொலீஸ் அதிபர் நிகழ்ச்சிகட்குத் தலைமைதாங்கினர். அன்னாரின் பாரியார் பரிசில்களை வழங்கினர். நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையால் பார்வையாளர்கள் எதுவித அலுப்புமின்றி உற்சாகத்துடன் ஆட்டப் போட்டிகளை இரசிக்கக்கூடியதாயிற்று. இரசிகர்களின் மனதை அதிகம் கவர்ந்தது 25 மைல் தூர சைக்கிளோட்டப்போட்டி என்பதையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

## நகைச் சுவை

ஞாயிற்றுக்கிழமை பூசைமுடிந்ததும் நேரே தவறணைக்குச் செல்லும் ஒரு பிரமுகரைப்பற்றி அப்பங்குக்குரவர் அறிந்து அவரைச் சந்திக்கச் சென்றார். அவருடன் சம்பாஷணை நடாத்திக் கொண்டிருக்கும்போது இவ்விடயம்பற்றிய பேச்சு எழுந்தது.

உங்கள் சொற்படி தானே நான் செய்கிறேன் சுவாமி என்றார் அந்தப் பிரமுகர்.

என்ன? உங்களை மதுபானம் அருந்தும்படி யான் கூறினேனு என்றார் குரவர் வியப்புடன்.

சிலவாரங்கட்கு முன்னர் ஞாயிறு பிரசங்கத்தில், தாகித்தவர்கள் பாக்கியவான்கள் என்று குறிப்பிட்டீர்களே! மறந்துவிட்டீர்களா? பூசை முடிந்தும் தாகம் எழுகிறது. அதைத் தீர்க்குமிடத்துக்குத்தானே நான் செல்ல வேண்டும் என்றார் பிரமுகர்.

## உங்கள் மத்தியில்

எங்கு இருவர் எனக்காக கூடியிருக்கிறார்களோ, அங்கு அவர்கள் மத்தியில் நானும் இருப்பேன் என எமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதர் கூறியுள்ளார். விசுவாசிகள் ஒன்று கூடிச்செபம்செய்தலைப்பற்றியே அவர் அவ்விதம் குறிப்பிட்டார். சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தின் வீதியொன்றின் வழியாகச் சென்றுகொண்டிருக்கும்போது ஓர் இல்லத்தில் யான் கண்டகாட்சி மேற்கூறிய குறிப்பை எனக்கு நினைவுறுத்தியது. அங்கு அன்னை, தந்தை, குழந்தைகள், பணிப்பெண் யாவரும் முழந்தாளிட்ட வண்ணம் குடும்பசெபமாலை செபித்துக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க குடும்பங்கள் வசிக்கும் ஒவ்வொரு வீதிவழியாகவும் மாலை நேரத்தில் செல்லும்போது இக்காட்சியைக்காண நேர்ந்தால் எவ்வளவு மகிழ்ச்சிகரமாகவிருக்கும்.

## திருநாளின் பின்னர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பல கிராமங்களிலும் சற்பிரசாதத்திருநாள் கொண்டாடப்பட்டது. பதைபதைக்கும் வெயிலில் பாலரும், வாலரும் சுற்றுப்பிரகாரவீதிகளை அலங்கரித்த காட்சியைக் கண்டு என்னுள்ளம் வியந்தது. ஆயின், சிறப்பாகச் சுற்றுப்பிரகாரத்தில் பங்குபற்றியபின்னர் சில குறைகளை மனதிற்கொண்டு சச்சரவு நடாத்திய ஒரு காட்சியையும் என் கண்ணூரக் காணக்கூடியதாயிற்று. இராசாதிராசன் எங்கள் வீதிகளில் எழுந்தருளி வருகிறார் என்பதற்காகப் பல கஷ்டங்கள் மத்தியிலும் வீதிகளை அலங்கரித்தோம். இச்செய்கையை மற்றவர்களின் முகத்துக்காகவோ கட்டளைக்குரவரைத் திருப்திப்படுத்தவோ நாம் செய்யவில்லை. எங்களாண்டவரைப் பெருமைப்படுத்தவே செய்தோம். எங்கள் வேலைகளில் சிலர் உதவி செய்யாதிருக்கலாம். அதைப் பற்றி நாம் கரிசனையெடுப்பதும், திட்டுவதும் நல்லதல்ல. எங்கள் வேலையின் கனகனத்தைக் கடவுள் அறிவார். அதற்காய சம்பாவனை எமக்குக் கிடைக்கும். எமக்கு உதவிசெய்யாதோரை நாம் ஏசுவதும், திட்டுவதும், எங்கள் நல்லமனத்தையும் பண்பாட்டையுமே மாற்றிவிடும் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

---

● கடவுள்வழிபாட்டுக்கு மகத்துவம்கொடுத்துக் கிறிஸ்தவஉலகத்துக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது வத்திக்கான்நகரம்; அங்கேபோகும் எவருக்கும் ஒருபுனிதஉணர்ச்சி தோன்றவே செய்கிறது" என்று இந்திய பிரபல சினிமாநடிகர் சிவாஜி கணேசன் தமது வத்திக்கான்விஜயம்பற்றி வர்ணித்திருக்கின்றார்.

● ஒன்று அல்லது அதற்குமேற்பட்டமனிதர் அல்லதுபெண்கள் சந்திரனிலே மாதக்கணக்கிலும், வருடக் கணக்கிலும் வாழமுடியும்; ஆனால், அவர்கள் திரும்பிவருதற்கான வானூர்திகள் கண்டுபிடித்துச் செய்யப்படுகிறவரையிலே அவர்கள் திரும்பிவந்துகொள்ள முடியாதிருப்பார்களென்று திரு. ஜோன் கொட் கூறுகின்றார்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday July 1-1962

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org